UNIVERSITY OF JAFFNA SRI LANKA
RECEIVED
-6-1986
PERIODICALS DIVISION

விலை ரூபா 1-25

# ஈழநாடு

NATIONAL THAMIL DAILY

மலர் 28 வைகாசி 27 ஷவ்வா 1 இதழ் 11

யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 10-6-1986

# ஜே. ஆர். இம்மாத இறுதியில் சோவியத் யூனியன் விஜயம்!

[கொழும்பு]

இலங்கை ஜனாதிபதி திரு. ஜே ஆர். ஜயவர்த்தன சோவியத் யூனியனுக்கு 12 நாள் விஜயமொன்றினை மேற்கொண்டு இம்மாதம் 29-ம் திகதி மாஸ்கோ செல்லவுள்ளதாக இந்திய வானொலி அறிவித்துள்ளது.

அரசியல் முக்கியத்துவம் நிறைந்ததாகக் கருதப்படும் இவ்விஜயத்தின் போது இலங்கை - சோவியத் யூனியன் ஆகிய நாடுகளிடையேயான வர்த்தக, பொருளாதார, அரசியல் உறவுகளை விருத்திசெய்வது பற்றி ஆராயப்படவுள்ளதாகத்தெரிவிக்கப்பட்டுள்ளது.

1977-ம் ஆண்டில் ஆட்சியைப் பொறுப்பேற்ற திரு. ஜயவர்த்தன தலைமையிலான இலங்கை அரசாங்கம் பெரும்பாலும் அமெரிக்க சார்புக் கொள்கைகளைக் கடைப் பிடித்துவந்தது.

இலங்கையில் அண்மையில் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடிகளில் இடதுசாரிப் போக்குடைய அரசியல் சக்திகளின் உள்நாட்டு, வெளிநாட்டுச் செல்வாக்குஅதிகளவில்காணப்படுவதையடுத்தே ஜனாதிபதி ஜயவர்த்தன மாஸ்கோவுடன் இதுகுறித்து ஆராய இந்த சோவியத் விஜயத்தை மேற்கொள்வதாக அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர். [செ]

"உதவிகள் தொடரும் சாத்தியமில்லை

# பொருளாதார நெருக்கடி விளிம்பில் இலங்கை!

## 'இடுப்புப் பட்டி'யை இறுக்கும்படி கேட்கும் நிலை" - றெனி டி மெல்

(கொழும்பு)

"இலங்கை பாரிய பொருளாதரர நெருக்கடியின் விளிம்பில் காணப்படுகின்றது. உள்நாட்டுப் பூசல்களால் நாட்டின் தேவையைச் சமாளிக்கும் வகையில் சீரான உணவு விநியோகத்திற்குக்கூட தடங்கல் ஏற்பட்டுள்ளது. வடக்கு - கிழக்கிலிருந்து நெல்முதலான அத்தியாவசிய பண்டங்களைப் பெறுவதில் பலத்தசிரமம் தோன்றியுள்ளது. இந்நிலையில் நாட்டுமக்களிடம் 'இடுப்புப் பட்டியை' இறுக்கிக்கட்டும்படி கேட்கும் நிலைக்கு நான் தள்ளப்பட்டுள்ளேன்" என்று நிதியமைச்சர் திரு. றெனி டி மெல் தெரிவித்துள்ளார்-

அமைச்சர் டி மெல் இலங்கையின் பொருளாதார நிலைமைகுறித்தும் வெளி நாட்டு உதவிகள் சம்பந்தமாகவும் ரூபவாஹினிக்கு சிங்களத்தில் வழங்கிபேட்டியிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

திரு. டி. மெல் மேலும் கூறியதாவது: "வெளிநாட்டு உதவிகளை தொடர்ந்து நம்பியிருக்க முடியாதுள்ளது.

"இந்த உதவிகள் குறித்த பேச்சுக்களை சர்வதேச அரங்குகளில் இலங்கை முன்வைக்கும் போதெல்லாம் எமது இனப்பிரச்னை குறித்தே முதலில் பிரஸ்தாபிக்கப்படுகிறது.

"இப்பிரச்னை காரணமாக இலங்கையில் பெருமளவு நிதி விரயமாவது இலங்கைக்கு

(5ம் பக்கம் பார்க்க)

## முல்லைத்தீவில் சோதனை

[முல்லைத்தீவு]

முல்லைத்தீவு நகர்ப்புறத்தில் சோதனை மேற் கொண்டிருந்த இராணுவத்தினர், முல்லைத் தீவு மீன்பிடிக் கூட்டுறவுச்சங்க ஊழியரான அன்ரன் என்பவரைக் கைது செய்துள்ளனர்.

கடந்தவாரம் தொடக்கம் முல்லைத்தீவு ஆஸ்பத்திரிக்கு அண்மையில் இராணுவத்தினர் நின்றுகொண்டு போக்குவரத்துச் செய்யும் வாகனங்களைத் தடுத்து நிறுத்தி பலத்த சோதனை நடத்துவதில் ஈடுபட்டுள்ளனர். [மா]

## "இந்தியா இனப்பிரச்னையைத் தீர்க்க கடினமாக முயற்சிக்கிறது"

### கருப்பையா மூப்பனார்

(சென்னை)

"இலங்கை இனப்பிரச்னையைத் தீர்க்க இந்தியாகடினமாக முயற்சித்து வருவதாகவும், இதற்கு இராணுவமுறையில் அல்லாத வேறொரு முறையினாலேயே தீர்வு காணப்பட வேண்டும்" என்று இந்திரா காங்கிரஸ் கட்சியின்பொதுச் செயலர் திரு. கருப்பையா மூப்பனார் நிருபர்களிடம் தெரிவித்தார்.

இலஙகைத் தமிழர் பிரச்னை ஒருசிக்கலான பிரச்னை. அதனால்தான் அதற்கு விரைவாக ஒரு சமூக தீர்வு ஏற்படுத்த முடியவில்லை என்று அவர் மேலும் தெரிவித்தார்.

## ஜே. ஆரிடம் ராஜீவின் விசேட செய்தி

[கொழும்பு]

இந்திய உயர் ஸ்தானிகர் திரு ஜே. என். டிக்ஷிற் இந்திய பிரதமர் ராஜீவ் காந்தியிடமிருந்து கொண்டு வந்த செய்தியொன்றை ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனவிடம் நேற்றுக்காலை கையளித்தார்.

முக்கியமானதும் விரிவானதுமென வர்ணிக்கப்பட்டுள்ள இச்செய்தி கடந்த மாதம் 31ம் திகதி ஜனாதிபதி ஜயவர்த்தனவினால் இந்தியப் பிரதமர் ராஜீவுக்கு அனுப்பி வைக்கப்பட்ட செய்திக்கு பதிலளிப்பதாக அமைந்துள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ராஜீவின் இச்செய்தியின் விபரங்கள் எதனையும் தெரிவிக்க இந்திய ஸ்தானிகர் மறுத்துவிட்டார். [து]

## 'ஷெல்லினால்' காயம்பட்டோர்——— 8 பேர் பெருமளவு இரத்தம் வெளியேறிய நிலையில் அனுமதி

[யாழ்ப்பாணம்]

கிளிநொச்சி, பரந்தன் ஆகிய இடங்களில் இடம்பெற்ற 'ஷெல்' தாக்குதலால் படுகாயமடைந்த எட்டுப்பேர் பெருமளவு இரத்தம் வெளியேறிய நிலையில் நேற்று யாழ். ஆஸ்பத்திரிக்கு வந்து சேர்ந்தனர்

கிளிநொச்சி இராணுவ முகாமிலிருந்து ஏவிவிடப்பட்ட 'ஷெல்' களால் படுகாயமடைந்தவர்களே இவர்களாவர்.

கிளிநொச்சியைச் சேர்ந்த வி. கருணாநிதி [45 வயது], பி. இராமையா [85 வயது], என். முருகேசு [20 வயது], ஏ. தேவராசா (19 வயது), எஸ். வீரம்மா [45 வயது] ஆகியோரும் பரந்தனைச்சேர்ந்த கே. சுந்தரம் (45 வயது), எம். இராமநாதன் (63 வயது), எஸ். புஷ்பவேல் (30 வயது) ஆகியோர் நேற்று அனுமதிக்கப் பட்டவர்கள்.

(5-ம் பக்க பார்க்க)

## அராலித்துறையில் படகு கவிழ்ந்தது பயணிகள் பாதிப்பில்லை

(நெடுந்தீவு)

வேலணை அராலித்துறையில் இருந்து சுமார் ஐம்பது பிரயாணிகளை ஏற்றிவந்த வள்ளம் ஒன்று இடை நடுவில் கடலில் கவிழ்ந்ததால் பிரயாணிகள் அனைவரும் கடலில் மூழ்கினர். அதிர்ஷ்டவசமாக அனைவரும் உயிர்தப்பினர்.

இந்த விபத்து நேற்றுக்காலை 10 மணியளவில் நடைபெற்றது.

வெளி இணைப்பு மோட்டார் பொருத்தப்பட்டிருந்த இந்தப் படகு அளவிற்கதிகமான பிரயாணிகளை ஏற்றியதாகவும், வேகமாக வந்து சடுதியாகத் திருப்ப முனைந்ததாலுமே இந்த விபத்து ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

படகு கவிழ்ந்ததையடுத்து தேற்றில் சிக்கிய பிரயாணிகளை ஏனைய படகுக்காரர்களும் இ[illegible]ர்களும் மீட்டனர்.

இவ்விபத்தில் சண்டெடுக்கப்பட்டபொருட்கள் வேலணை அராலித்துறை முகத்தில் வைக்கப்பட்டுள்ளன.

## டி. ஈ. டபிள்யூ. குணசேகரா புதிய கலவான எம். பி.

(கொழும்பு)

கலவானத் தொகுதியின் பாராளுமன்ற உறுப்பினராக திரு டி. ஈ. டபிள்யூ. குணசேகரா தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய குழு காரியதரிசியான இவரை இக்கட்சியின் மத்திய குழுவே பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்தது.

புதிதாக நியமனம் பெறும் திரு குணசேகரா கலவானத் தொகுதியில் மட்டுமல்லாமல் இரத்தினபுரி மாவட்டத்தில் இடதுசாரி இயக்க நலன்களை பேணக்கூடியவராக இருக்க வேண்டும் என்பதனாலேயே தெரிவு செய்யப்பட்டுள்ளதாக இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் செயலாளர் கே. பி. சில்வா தெரிவித்தார். [து]

உ

விராட் விஸ்வப் பிரம்மணே நம:

## புதுமனைப் பிரவேச அழைப்பு

அன்புடையீர்,

நிகழும் அக்ஷய ஸ்ரீ வைகாசி மீ 29-ஆந் திகதி (12-06-86) வியாழக்கிழமை காலை 5-00 மணி முதல் 6-00 மணி வரையில் வரும் இடபலக்கின சுபவேளையில்,

எம்மால் புதிதாக அமைக்கப்பெற்ற

★ "துவாரகை" ★

என்னும் புதுமனையில் பிரவேசஞ்செய்து வாழ்வாங்கு வாழத் திருவருள் கூர்ந்து பெரியோர்களால் நிச்சயித்திருப்பதனால், அத்தருணம் தாங்கள் சுற்றஞ் சூழ வருகைதந்து புதுமனையை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

பூநாறிமர ஒழுங்கை,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

இங்ஙனம்
தங்கள் நல்வரவை விரும்பும்
க. மகாதேவா தம்பதிகள்

[C-2797]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

அச்சகம் அமைப்பதற்குரிய அச்சுயந்திரம் உட்பட சகல உபகரணங்களும் விற்பனைக் குண்டு. உடன் தொடர்பு கொள்க. எந்நேரமும் பார்வை இடலாம் 419, ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணம். (C2720)

A/L அசேதன இரசாயனம் வினா—விடை நூல் வெளி வந்துவிட்டது. ஆசிரியர் சத்தீஸ். விற்பனைக்குண்டு பூபாலசிங்கம் புத்தகசாலை, ஸ்ரீ லங்கா புத்தகசாலை, 108, Brown Road, யாழ்ப்பாணம். (C 2781)

பம்பாய் வெங்காயவிதை விற்பனைக்குண்டு. பிள்ளையார் மெற்றல் வேக்ஸ், 257, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (C2589)

திருநெல்வேலி கிழக்கில் பால் பண்ணைக்கு அண்மையில் ஐந்து பரப்புக்காணி இரண்டாகப் பிரித்து விற்பனைக் குண்டு. தொடர்புகள்: கயிலைநாதன் வீமன்காமம் மகாவித்தியாலயம், தெல்லிப்பழை. C-2785

## தேவை

சிங்கப்பூரில் நண்பரின் வீட்டில் பணிப்பெண்ணாக பணிபுரிய பெண்தேவை. உடனடியாக தொடர்புகொள்ளவும். த. துரைசிங்கம் 376B, நாவலர் வீதி, கனகரத்தினம் மகாவித்தியாலயம் முன்பாக அரியாலை. C-2758

புதிதாக ஆரம்பிக்கப்பட்ட சைனீஸ் ஹோட்டலுக்கு சமயல் காரரும், (Cooks) போசனம் பரிமாறுபவர்களும் (Stewards) தேவை. அனுபவச் சாட்சிப் பத்திரங்களுடன் நேரில் வரவும். 207, ஒல்ட் பாக்வீதி, சுண்டிக்குழி. C-2792

காசாளர், எழுதுவினைஞர், தட்டச்சு, சுருக்கெழுத்து ஆசிரியர் (ஆங்கிலம்) தேவை. 15-06-86க்கு முன் விண்ணப்பிக்கவும். நிர்வாகி, வாணி கல்வி நிலையம், கே. கே. எஸ். வீதி, சுன்னாகம். (C 2725)

எமது நிறுவனத்திற்கு பெண் லிகிதர் ஒருவர் தேவை. ஓரளவு ஆங்கில அறிவுடன் பிரதான வீதியின் சுற்றுடலில் வசிப்பவர் விரும்பத்தக்கது. தொடர்பு: சதீஸ் ரெக்கோடிங் ஸ்ருடியோ 189, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம் C 2768

## வகுப்புகள்

108, Brown Road, A/L 88 பொது இரசாயனம் ஆசிரியர் சத்தீஸ் ஆரம்படம்; 14-06-86 சனி 6-30 A M. (சனி, ஞாயிறு 6-30A.M. செவ்வாய் 4-45 P M.) (C2783)

ரேடியோ and ரி.வி (டெக்) வயறிங், வெல்டிங், மோட்டார்மெக்கானிசம், பிளம்பிங், வாகனங்களுக்கான வயறிங், தட்டெழுதது, சுருக்கெழுத்து, புதிய பிரிவுகள் குறைந்த கட்டணத்துடன் ஆரம்பமாகின்றன, அரசாங்கத்தில் பதிவு செய்யப்பட்ட சான்றிதழ் வழங்கப்படும். Vispa Engineering, 328, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். C-2786


## வைத்தியம்

மூலரோகங்கள், வாதரோகங்கள், சருமரோகங்கள், எக்ஸிமா, தொய்வ, பீனிசம், தலைவலி, முடியுதிர்வு, அகால நரை, நரம்புத்தளர்ச்சி, நீரழிவு, மாதவிடாய்கால வேதனைகள், மகப்பேறின்மை, குழந்தைகட்குசித்தஆயுர்வேத சிகிச்சை பெறலாம். Dr. R. மங்களாம்பிகை D, A. M. Dr. R. இலக்ஷ்மண ஐயர் D.A.M., மங்களபதி வைத்திபசாலை, [பண்டாரகுளம் பிள்ளையார் கோவிலடி] 41/5, சங்கிலியன்வீதி, நல்லூர். (C2570)

## கல்வி

108, Brown Road, A/L 88 இரசாயனம். புதிய பிரிவு ஆரம்பமாகி விட்டது திங்கள், புதன், வெள்ளி 4-45 P. M. ஆசிரியர் சத்தீஸ். (C 2782)

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
மா. பாலசுந்தரம்
[முன்னாள் சுன்னாகம் பாலன் ஸ்ரோர் உரிமையாளர்]

தோற்றம்:
29- 11- 1945
மறைவு:
2- 6- 1984
திதி:
10- 6- 1986

மாறாத அன்போடும் மட்டற்ற மகிழ்வோடும் சீரொடு சிறப்பெய்தி பேரொடு புகழ் பெற்று மற்றோர் மதிக்க வாழவைத்த எங்கள் அன்புத்தெய்வம் மறைந்து இரண்டாண்டுகள்தான் சென்றதையா! ஆனால் நீங்கள் ஏற்றிவைத்த தீபம் என்றும் எம் நெஞ்சில் எரியுதையா! நீங்கள் மறைந்தாலும் உங்கள் அன்பும், பாசமும் எம்மை வழிநடத்திச் செல்லும். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் சிந்தனையில் உயிர்வாழும்:
அன்பு மனைவி சிவரஞ்சிதமலர்,
மழலைகள்: மயூரன், மயூரதா.
''பழமுதிர்சோலை''
ஏழாலை மேற்கு,
[C 2791] ஏழாலை.

## குளங்களை ஆழமாக்கத்தடை

[சுழிபுரம்]

வலிகாமம் மேற்குப் பகுதியிலுள்ள குளங்களை அனுமதியில்லாது ஆழமாக்கும் வேலைகளை செய்பவர்களை உடன் தடுத்து நிறுத்துமாறு உதவி அரசாங்க அதிபர் திரு. து. வைத்திலிங்கம் தமது பகுதியிலுள்ள விசேடசேவை உத்தியோகத்தர்கள் கிராம சேவை அலுவலர்கள், கிராம முன்னேற்றச் சங்கத்தினரைக் கேட்டுள்ளார்.

பலர் குளங்களில் களிமண் அள்ளுவது தெரியவந்துள்ளது என்றும் நாளடைவில் இச் செய்கையால் குளங்கள் வற்றிவரக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டு எமது குடிநீர் நிலையங்கள் மாசுபடும் நிலை ஏற்பட்டு விடும் என்றும் தமது சுற்று நிருபத்தில் உதவி அரசாங்க அதிபர் தெரிவித்துள்ளார். [க]

## ஈட்டு விற்பனவு விளம்பரம்

### மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில்

ஈடு/6277 இலக்க வழக்கில் வாதி சுழிபுரம் நவரத்தினம் கைம்பெண் பொன்னம்மாவுக்கு விற்பனவு திகதி வரை போகவேண்டிய தீர்வைத்தொகை 2000/- ரூபாவும் மேலும் இதில் 1000 ரூபவுக்கு 17-7-1985 தொடக்கம் 20-11-1985 வரை வருடமொன்றுக்கு 24% வீத வட்டியும் அதன்பின் சேர்ந்த முழுத் தொகைக்கும் இறுக்கும்வரை வருடமொன்றுக்கு 12% வீத வட்டியும் வழக்குச்செலவு 2695 ரூபா 70 சதமும் விற்பனவுச் சலார்களும் இத்தொகையைப் பிரதிவாதிகளாகிய பண்டத்தரிப்பு சில்லாலை சாந்தை மாரியன் செல்லனிடமும் பெண் தங்கம்மாவிடமும் அறவிடுவதற்காக எனக்களித்த அதிகாரத்தின்படி வழக்கில் சம்பந்தப்பட்ட இதன்கீழ் விபரிக்கப்படுமாதனம் 1986-ம் வருடம்யூலாய் மாதம் 3-ந் திகதி (3-7-1986 முற்பகல் பத்துமணி தொடக்கம் அவ்வாதனத்தில் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

### குறித்த ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் மேற்குப்பகுதி பண்டத்தரிப்பு கோவிற்புற்று சில்லாலை இறை ''துவரம் கட்டையடி'' பர நெ. இலா. இரண்டும் வடமேற்குகல்லையிலிருக்கும் கிணற்றில் பங்கும் வழிவாய்க்காற் பாவிப்பும் வான்பயிர் செய்பயிர்களும், எல்லை கிழக்கும் வடக்கும் தெற்கும் கையொழுங்கை, மேற்கு சின்னப்பொடியன் பொன்னனுக்குரிய காணி இதடங்கலும்.

வி. செ. குட்டிப்பிள்ளை,
விற்பனை ஆணையாளர்.

643, கே. கே. எஸ், வீதி,
யாழ்ப்பாணம். (C 2790)

## பிறமாவட்டங்களுடன் தொடர்பற்ற நிலையில் யாழ். குடாநாடு

[யாழ்ப்பாணம்]

யாழ். குடாநாடு பிறமாவட்டங்களுடனான தொலைபேசி, ரயில், பஸ் போக்குவரத்துத் தொடர்புகள் யாவும் துண்டிக்கப்பட்ட நிலையில் உள்ளது.

கிழக்குமாகாணம் உட்பட மற்றைய மாகாணங்களில் நடைபெறும் சம்பவங்களை வானொலி, தொலைக்காட்சி மூலம் தவிர வேறெந்தவகையிலும் கடந்த புதன்கிழமை தொடக்கம் யாழ் குடாநாட்டிலுள்ளவர்கள் அறிய முடியாத நிலையிலிருக்கின்றனர். (மா-க)

## குண்டு வீச்சு—

## நிருபர்கள் மயிரிழையில் உயிர் தப்பினர்!

[கிளிநொச்சி]

கிளிநொச்சிப்பகுதியில் குஞ்சுப்பரந்தன் என்ற இடத்தில் செய்தி சேகரிக்கச் சென்ற இரு பத்திரிகை நிருபர்கள் மயிரிழையில் உயிர்தப்பினர்.

கே. வி. கே. திருலோகமூர்த்தி [ஈழநாடு], மு. விவேகானந்தன் இவர்களுடன் சென்ற பாடசாலை ஆசிரியர் நடேசன், தம்பிராசா ஆகியோரே விமானக் குண்டு வீச்சு ஒன்றிலிருந்து உயிர் பிழைத்தனர்.

இக்குண்டு வீச்சின் போது இவர்கள் பதுங்கியிருந்த வீடு சேதத்துக்குள்ளானதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை விமானக்குண்டு வீச்சுகளினாலும், ஷெல் தாக்குதலினாலும் கிளிநொச்சியில் சில வர்த்தகர்களும் இறந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது இவர்களின் சடலங்களும் பலியான இடங்களிலேயே கிடக்கின்றன எனவும் தெரிய வந்துள்ளது.

## ராஜராஜசோழன் நினைவுப்போட்டி

[பண்டத்தரிப்பு]

கீரிமலை சிவநெறிக்கழகம் இராஜராஜசோழன் நினைவு விழாவை எதிர்வரும் ஜூலை மாதத்தில் சிறப்பாகக் கொண்டாடுவது என்று தீர்மானித்துள்ளது. இவ்விழா தொடர்பாக நாடகப்போட்டி, ஓவியப்போட்டி ஆகியபோட்டிகளை ரீதியில் பாடசாலை நடாத்துவதென்றும் தீர்மானித்துள்ளது.

இப்போட்டிகளுக்கானவிண்ணப்பங்கள் இம்மாதம் 29-ம் திகதிக்குமுன்னர் திரு. ச விநாயகரத்தினம், சிவநெறிக் கழகச் செயலாளர், மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கப்படவேண்டும் என்று இது தொடர்பாக வெளியிடப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. [க]

## நிர்வாகிகள்

[யாழ்ப்பாணம்]

சித்தன்கேணி கலைநகர் நேருஜீ கிராம முன்னேற்ற சங்கத்தினதும் சனசமூக நிலையத்தினதும் புதுவருட நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டுள்வனர்

தலைவர்மு. புஸ்பராசா, உப தலைவர்: வி. தயாளன், செயலாளர்: க. பகரசிங்கம் உப செயலாளர்: ந. கேசவராசா, பொருளாளர்: பி. வைரவநாதன், பரிசோதகர்: இ. முத்துச்சிவராசா, மற்றும் நிர்வாக உத்தியோகத்தர்களாக 11 பேர் தெரிவானார்கள்.

★

யாழ், ஆனைப்பந்தி மெ. மி. த. க. பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் பொதுக் கூட்டம் கடந்த ஞாயிறன்று பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது.

பாடசாலை அபிவிருத்திச் சங்க உத்தியோகத்தர்களாக பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர். தலைவர்: திரு, ச. கைலாயபிள்ளை [அதிபர்], செயலாளர்: திரு. க. க. இராஜேந்திரன், பொருளாளர்: திருமதி பி. அன்ரனி, கணக்காய்வாளர்; திரு. வி. ஜி. ரி. மூர்த்தி மேலும் உறுப்பினர்களாக ஆறுபேர் தெரிவு செய்யப் பட்டனர். [சிவ]

## யாழ். அபிவிருத்திச் சபை ஊர்காவற்றுறை உப அலுவலகம்

## ஏலவிற்பனை

1986 ம் ஆண்டு மே மாதம் 30ந் திகதி காலை 10-00 மணிக்கு கீழ்காட்டப்படும் பொருட்கள் என்னால் ஊர்காவற்றுறை உப அலுவலக வளவில் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

கூடிய கேள்விக்காரர் முழுத் தொகையையும் உடன் செலுத்தி பொருட்களை தங்கள் செலவில் அப்புறப்படுத்த வேண்டும்.

**பொருட்களின் விபரம்:**

1. சந்தையிலுள்ள பாவிப்பற்ற கொட்டகையின் தகரங்கள், இரும்புக் கேடர்கள்.
2. நூலகத்திலுள்ள பழைய புதினப்பத்திரிகைகள்,

**மதிப்புத்திட்ட தொகை:**
ரூபா 2901-00

ச. சார்ள்ஸ்பொன்கலன்,
அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர்,
யாழ் அ ச. உப அலுவலகம்,
ஊர்காவற்றுறை.
[A 827]

## மக்கள் கோரிக்கை

(பண்டத்தரிப்ப)

தற்போது வாரத்தில் இரு தினங்களில் பிற்பகலில் மாத்திரம் இயங்கிவரும் இளவாலை அரசினர் பகுதிநேர மருந்துச் சாலையை பொதுமக்கள் நலன் கருதி வாரத்தில் ஐந்து தினங்களுக்குசேவையாற்ற கூடியதாக திறக்கப்படவேண்டும் என்று இளவாலை பொருளாதார, கலாசார அபிவிருத்திச் சங்கம் யாழ். பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளரை மகஜர் ஒன்றின் மூலம் கேட்டுள்ளது. (க)

## நாய்களுக்கு தடுப்பூசி

[சுழிபுரம்]

சுழிபுரம் சுகாதாரப்பகுதிக் குட்பட்ட பொன்னாலை, மூளாய், சுழிபுரம் பகுதியில் இம்மாதம் 16ம், 17ம் திகதிகளில் நாய்களுக்கு தடுப்பூசி போடப்படவுள்ளது. சுகாதாரப்பகுதியினர் இப்பணியை இலவசமாகச் செய்கின்றனர். (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆஸ்திரிய ஜனதிபதியாக வால்ட்ஹெய்ம் தெரிவு·

## சோவியத் பாராட்டு இஸ்ரேல் வருத்தம்

**லண்டன், ஜூன். 9**

**ஆஸ்திரியாவின் ஜனதிபதியாக திரு. குர்த் வால்ட்ஹெய்ம் தெரிவு செய்யப்பட்டுள்ளார். 67வயதான இவர் ஐ. நா. வின் முன்னுள் தலைமைச் செயலாளரா வார்.**

இறுதித் தேர்தல் முடிவுகளின்படி திரு.வால்ட்ஹெய்ம் 54 சதவீத வாக்குகளை பெற்றதுடன், அவரை எதிர்த்துப் போட்டியிட்ட சோஷலிசக் கட்சி வேட்பாளர் 46 சதவீத வாக்குகளை பெற்றுள்ளார். இரண்டாவது உலக யுத்தத்தின் பின்பு சோஷலிசக்கட்சியை சாராத ஒருவர் ஆஸ்திரியாவின் ஜனதிபதியாக வந்தது இதுவே முதல்முறை என்று கூறப்படுகிறது.

இரண்டாவது உலக யுத்தத்தின் போது திரு. ஹெய்ம் நாஜி அக்கிரமங்களில் ஈடுபட்டிருந்தார் என்ற குற்றச்சாட்டுக்கள் யாவும் மறைந்து போய்விட்டனஎன்று இத்தேர்தல் முடிவு குறித்து அரசியல் வட்டாரங்கள் கருத்து வெளியிட்டன.

திரு வால்ட்ஹெய்ம் அப்போது இந்த நாஜி அக்கிரமம் சம்பந்தமாக தம்மீது சுமத்தப்பட்ட குற்றச் சாட்டுக்களுக்கு மறுப்புத் தெரிவித்ததுடன் தாம் ஜனதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டால் ஆஸ்திரியாவின் யூத சமூகத்தின் பந்தோபஸ்துக்கு ஆவன அனைத்தையும் செய்வேன் என்று உறுதி அளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது:

இதேவேளை இத்தெரிவு குறித்து இஸ்ரேல் தனதுவருத்தத்தையும், ஏமாற்றத்தையும் தெரிவித்துள்ளது. இது விடயத்தில் இஸ்ரேல் தனது அதிருப்தியை அறிவிக்கும் வகையில் ராஜதந்திர முயற்சிகள் சிலவற்றை மேற்கொள்ளக்கூடுமென்றும், அவை ராஜதந்திர உறவுகளை முறித்துக் கொள்ளாத வகையில் அமையலாமென்றும் கூறப்படுகின்றது.

திரு வால்ட்ஹெய்மின் இந்த தெரிவு குறித்து சோவியத் செய்தி ஸ்தாபனமான 'டாஸ்' பாராட்டுத் தெரிவித்துள்ளதுடன், அமெரிக்கா இத்தேர்தலில் திரு.ஹெய்முக்கெதிராக சொந்த முறையில் அவதூறுபேசிஎதிர்ப்புப்பிரசாரம் செய்ததையும் சுட்டிக் காட்டியுள்ளது. (ரா)

# ஆற்று வெள்ளத்துக்கு ஆசிரியர்கள் பலி

புதுடில்லி, ஜூன். 9

ஆந்திர பிரதேச மிஷனரிப் பாடசாலை ஒன்றைச் சேர்ந்த ஐந்து ஆசிரியர்கள் ஆற்று நீருக்குப் பலியாகியுள்ளனர்.

விஜயவாடாவிலுள்ள கிருஷ்ணு நதியிலேயே நேற்று முன்தினம் இந்த விபத்து இடம்பெற்றது.

தமது சகா ஒருவர் ஆற்று நீரில் அடித்துச் செல்லப்பட்டபொழுது அவரைக் காப்பாற்றும் முயற்சியில் மற்றவர்கள் ஈடுபட்டபொழுதே இவர்கள் பலியாகியுள்ளனர்,

பலியானவர்களில் நான்கு பேர் கேரளாவைச் சேர்ந்தவர்களென்றும், ஒருவர் தமிழ் நாட்டைச் சேர்ந்தவரென்றும் கூறப்பட்டது. (ரா)

செம்பியன் பற்றில்

# ஒன்றரை லட்சம் ரூபா செலவில் நூல்நிலையம்

(புலோலி)

செம்பியன்பற்றில் சுமார் ஒன்றரை லட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்படவுள்ள பொதுசன நூல்நிலையத்திற்கான அடிக்கல் நாட்டும் விழா அண்மையில் நடைபெற்றது

யாழ்ப்பாணம் அபிவிருத்திச்சபை செம்பியன்பற்று உப அலுவலக அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் திரு. எஸ். வி. கணேசு நூல்நிலையத்திற்கான அடிக்கல்லை நாட்டிவைத்தார்.

இந்நூல்நிலைய நிரமாணத்திற்கான நிதி பன்முகப்படுத்தப்பட்ட அபிவிருத்தித்திட்டத்தின்கீழ் யாழ்ப்பாணம் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. அன்ரன் அல்பிரட்டின் சிபார்சில் யாழ்ப்பாணம் அபிவிருத்திச்சபைச் செயலாளர் திரு மு. பஞ்சலிங்கத்தால் ஒதுக்கப்பட்டது.

இதேவேளை யாழ்ப்பாணம் அபிவிருத்திச் சபை கட்டை உப அலுவலகப்பகுதியில் சுமார் இரண்டேகால் லட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்படவுள்ள பொதுசன நூலகத்திற்கான வரைபடம் மதிப்பீடு தயாரிப்பு நடவடிக்கைகள் மிகத்துரிதமாக நடைபெற்றுவருவதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (க)

உலகச் செய்திகள்

# கன்னட மொழித் திணிப்பு: கர்நாடகத்தில்சத்தியாக்கிரகம்

புதுடில்லி, ஜூன், 9

கர்நாடகத்தில் கன்னட மொழி கட்டாயபாடமாக்கப்பட்டுள்ளதை எதிர்த்து மாபெரும் சத்தியாக்கிரகப்போராட்டம் ஒன்று நடத்தப்படவுள்ளது.

இதனையொட்டி கர்நாடகத்தில் பெரியளவிலானபொலிஸ் பந்தோபஸ்து போடப்பட்டுள்ளது முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக சமூகவிரோதச் செயல்களில் ஈடுபடுவோர் என்று சந்தேகிக்கப்படும் இருநூறுபேர் கைது செய்யப்பட்டுள்ளனர். நூற்றுக்கு மேற்பட்டோர் நீதிமன்றத்தடுப்புக் காவல் முகாமில் வைக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை கர்நாடக மகாராஷ்டிரா எல்லைப்பிரச்னையை கிளர்ச்சிப்படையினர் மூலம் அணுகும் போக்கை கைவிடும்படி கர்நாடகமுதல்வர் திரு ராமகிருஷ்ணஹெக்டே வேண்டுகோள் விடுத்துள்ளார்.

திரு ஹெக்டே மகாராஷ்டிரா தீமா சமித்தி தலைவர் திரு சரத்பவானுக்கு எழுதியுள்ள கடிதமொன்றில் இவ்வாறு கிளர்ச்சிகள் நடத்தப்பட்டுவருவதால் உயிருக்கும் உடைமைக்கும் பெரும்இழப்பு ஏற்பட்டுவருவதாக வருத்தம் தெரிவித்துள்ளார். (ரா)

## நேபாளப் பாராளுமன்ற கூட்டத்தொடரில் பிரதமர் தெரிவு

காட்மன்ட், ஜூன். 9

நேபாளத்தில் புதிதாகத் தெரிவுசெய்யப்பட்ட பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டத்தொடர்இன்றுஆரம்பித்து வைக்கப்படும.

உறுப்பினர்கள் பதவிப்பிரமாணம் எடுத்தபின்பு தலைவர் துணைத்தலைவர்கள் தெரிவு நடைபெறும். கூட்டத்தொடரின் நிகழ்ச்சி நிரலில் பிரதமரின் தெரிவே முக்கிய இடம் பெறும்.

நேபாளத்தில் அரசியல்கட்சி முறை இல்லாமையினுல் பிரதமமந்திரியாக வரவிரும்புபவர்கள் இருபத்தைந்து உறுப்பினர்கள் முன்மொழிந்து வழிமொழிந்ததன் பின்பே அந்த முயற்சியில் ஈடுபடலாம்.

இதனைத்தொடர்ந்து நடத்தப்படும் தேர்தலில் பிரதமராக வருபவர் 60 சதவீத வாக்குகளைப் பெறவேண்டும். இந்த எண்ணிக்கையை எந்தவொரு வேட்பாளரும் பெறவில்லையெனில் மூன்றுபேரின் பெயர்பட்டியலொன்று மன்னரிடம் கையளிக்கப்படும்.அதில் எவராவது ஒருவரை பிரதமராக தெரிவு செய்யும் உரிமை மன்னருக்கே உண்டென்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ரா)

## அணுஎதிர்ப்பு டாக்டர் 'விக்' காலமானுர்

புதுடில்லி, ஜூன். 9

அணுவாயுதப் போர்த்தடுப்புக்கான இந்தியடாக்டர்களின் தேசிய காங்கிரஸின் தலைவர் டாக்டர் கே. எல். விக் சுவிட்சர்லாந்தில் காலமானுர்.

மாரடைப்பால் திடீர்மரணமடைந்த இவருக்கு 81 வயதாகும். புதுடில்லியில் அமைந்துள்ள அகில இந்திய வைத்தியக்கழகத்தின் முன்னுள் தலைவரான திரு.விக் இந்திய கல்வி, வைத்திய ஸ்தாபனங்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தார். (ரா)

நெடுங்கேணியில்

# இவ்வருட இளைஞர் விழாநடைபெறும்

(வவனியா)

இவ்வருட இளைஞர் விழா வவனியா மாவட்டத்தின் நெடுங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் நடைபெறும்

தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் அனுசரணையுடன் இடம்பெறும் இவ்விழாவிற்கு ஐயாயிரம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மாவட்ட ரீதியாக வருடாந்தம் இளைஞர் விழாக்கள் நடைபெற்றதுவருகின்றது தெரிந்ததே.

நெடுங்கேணி பிரிவில் ஐந்து இளைஞர் கழகங்கள் உள்ளன இளைஞர் விழாவினை முன்னிட்டு விளையாட்டுப் போட்டிகள், கலாச்சாரப் போட்டிகள் மற்றும் கட்டுரை, பேச்சு, கவிதைப்போட்டிகளும் இளைஞர் கழக உறுப்பினர்களிடையே நடாத்தப்படவுள்ளது. (க)

ரூ, 1,35,000 செலவில்

# புலோலி பொதுசன சந்தை கட்டடம்

(புலோலி

யாழ்ப்பாண மாவட்ட அபிவிருத்திச்சபை சுமார் ஒரு லட்சத்து முப்பத்தையாயிரம் ரூபா செலவில் புலோலி பொதுசனச் சந்தையில் அபிவிருத்தி வேலைகளை மேற்கொண்டுவருகின்ற .

யாழ் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. அன்ரன் அல்பிரட்டின் கோரிக்கையையடுத்தே இப்பொதுசனச் சநதை அபிவிருத்திக்கான நிதியை யாழ்ப்பாணம் மாவட்ட அபிவிருத்திச்சபைச் செயலாளர் ஒதுக்கீடுசெய்திருந்தார்.

இப்பொதுசனச் சந்தையில் சுமார் 65,000 ரூபா செலவில் மூன்று கடைகள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன. சந்தையின் கட்டிடங்கள் சுமார் 10,000 ரூபா செலவில் திருத்தி புனரமைக்கப்பட்டுள்ளன பொதுசனச்சந்தைக்கான எல்லை மதிலும் சுமார் 15,000 ரூபா செலவில் அமைக்கப்பட்டுள்ளது.

இப்பொதுசன சந்தைக்கு வரும் பாவனையாளர்களினதும், உப அலுவலகத்திற்கு வரும் பொதுமக்களினதும், இலவச ஆயுர்வேத வைத்திய சாலைக்கு வரும் நோயாளிகளினதும் நன்மை கருதி சந்தைக்கு அருகாமையில் இருக்கும் புலோலி உப அலுவலகத்தில் சுமார் 45 000 ரூபா செவில் நீர்த்தாங்கி ஒன்றும் நிர்மாணிக்கப்பட்டுவருகின்றது. இந்நீர்த்தாங்கி நிர்மாண வேலைகள் வெகுவிரைவில் பூர்த்தியடையவுள்ளன. (க)

"உலகக்கிண்ண" உதைபந்தாட்டம்:

# டென்மார்க்கும் 2-வது சுற்றுக்குத் தெரிவானது

[மெக்ஸிக்கோ]

மெக்ஸிக்கோ நகரில் நடைபெற்றுவரும், 'உலகக்கிண்ண' உதைபந்தாட்டப் போட்டியின், 2-வது சுற்றுப் போட்டியில் விளையாடுவதற்கு டென்மார்க் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் டென்மார்க்குக்கும் - உருகுவேக்குமிடையில் நடைபெற்ற போட்டியில், டென்மார்க் 6—1 கோல்களால் வெற்றி பெற்று மேற்படி போட்டியின் 2-வது சுற்றில் விளையாடத் தெரிவானது.

**பெல்ஜியம் வெற்றி**

பெல்ஜியத்துக்கும் - ஈராக்குமிடையில் நடைபெற்றபோட்டியில், பெல்ஜியம் 2—1 கோல்களால் வெற்றி பெற்றது.

**மே. ஜெர்மனி வெற்றி**

மே ஜேர்மனிக்கும் - ஸ்கொட்லனுக்குமிடையில் நடைபெற்ற மற்றுமொரு போட்டியில், மே. ஜேர்மனி 2—1 கோல்களால் வெற்றி பெற்றுள்ளது.

இவ்வெற்றியினுல் மே ஜேர்மனி தற்போது 3 புள்ளிகளைப் பெற்றுள்ளது.

**இன்றைய ஆட்டங்கள்**

குறூப்-A:- இத்தாலி எதிர் தென் கொரியா.

குறூப்-A:- பல்கேரியா எதிர் ஆர்ஜன்ரீன. (வி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

சிந்தனை என்பது வைரத்துக்குள் ஒளிந்துகிடக்கும் ஒளியைக் கடைந்து வெளிக்கொணர்வதைப் போல உயிரிடத்தில் ஒளிந்துகிடக்கும் அறிவாற்றல் திறனை வெளிப்படுத்துவது.

— குன்றக்குடி அடிகளார்

## நமது நோக்கு

# முன்னாள் ஐ. நா. செயலர் வால்ட்ஹெய்மின் வெற்றி

ஆஸ்திரியாவில் நடந்து முடிந்த குடியரசுத் தலைவர் தேர்தலில் முன்னை நாள் ஐ. நா. பொதுச் செயலர் குர்த் வால்ட் ஹெய்ம் வெற்றிபெற்றிருக்கிறார்.

திரு. வால்ட் ஹெய்ம் வெற்றிபெற்றிருப்பது பெரிய விடயமல்ல ஆனால் அவருக்கு எதிராக சர்வதேச மட்டத்திலும், உள்நாட்டிலும் யூத இயக்கங்கள் செய்துவநத எதிர்ப் பிரசாரங்கள் தோல்வி கண்டிருப்பதே முக்கியம்.

வால்ட் ஹெய்ம் வெற்றி பெற்றமை இஸ்ரேலுக்கு பெரும் கவலையைக்கொடுத்துள்ளது. அமெரிக்காவுக்கும் இவரது வெற்றி மகிழ்ச்சியைத் தரும் என்று சொல்லமுடியாது. சோவியத் செய்தி ஸ்தாபனமான 'டாஸ்' உடனடியாகவே வெளியிட்டுள்ள ஒரு செய்தியில் ஐ நா வில் அவர் ஆற்றியுள்ள பணிகளுக்குக் கிடைத்துள்ள வெற்றி எனப் பாராட்டியுள்ளது

67 வயதான வால்ட் ஹெய்ம், 2-வது உலக யுத்தத்தின்போது ஆயிரத்துத் தொளாயிரத்து நாற்பதுகளில் ஹிட்லரின் 'நாஜி' படையில் ஓர் அதிகாரியாகப் பணியாற்றியுள்ளார் என்றும் ஆஸ்திரிய அதிபர் தேர்தலில் வெற்றிபெற்றால் 60 லட்சம் யூதர்களை நாஜிகள் கொலைசெய்த குற்றத்துக்கு மன்னிப்புஅளிப்பதுபோலாகும் என்றும் சர்வதேச யூதர்கள் காங்கிரஸ் பிரசாரம் செய்தது. ஆனால் இது தம்மை இழிவுபடுத்தும் பிரசாரம் என்றும் யூத படுகொலைகளுக்கும் தமக்கும் சம்பந்தமே இல்லையென்றும் வால்ட் ஹெய்ம் கூறிவிட்டார்.

இதே சமயம் லண்டனிலுள்ள யூதர்கள் பற்றிய ஆய்வுக் கழகத்தின் தலைவர் எட்கார் புரொன்மன் வெளியிட்ட ஓர் அறிக்கையில், 'உலக வைத்திய அகராதியில் புதிய நோய் ஒன்றை சேர்த்துக் கொள்ள வால்ட் ஹெய்ம் உதவியுள்ளார் - அதுதான் வால்ட் ஹெய்ம் வியாதி! அதாவது நீர் ஒரு நாஜியாக இருந்தீரா என்பது உமக்கே நினைவிருக்காது' என கிண்டல் செய்தார்.

இவ்வாறு எல்லா வகையிலும் இஸ்ரேலியரின் ஆதரவுடன் பலத்த அவதூறு பிரசாரம் செய்யப்பட்ட போதிலும் அந்நாட்டு கன்சர்வேடிவ் கட்சியின் சார்பில் போட்டியிட்ட வால்ட் ஹெய்ம் வெற்றி பெற்றுள்ளார்.

தேர்தல் பிரசாரங்களின் போது ஆஸ்திரியாவின் பெருந் தலைவராக அவரது கட்சி அவரை வர்ணித்தது.

'வெளிநாட்டு தலையீடுகளை மக்கள் நிராகரிப்பார்கள் என்பதில் எனக்கு நம்பிக்கை இருக்கிறது. எமது விவகாரங்களில் சம்பந்தமே இல்லாதவர்கள் எல்லாம் பெரிதாக வெளியில் இருந்து கத்துகிறார்கள்' என்று வால்ட்ஹெய்ம் ஆஸ்திரிய மக்களிடம் கூறினார்.

அந்நாட்டு மக்கள் அவர் கருத்தை ஏற்றுக் கொண்டு அதிபராகத் தெரிவு செய்துள்ளனர்.

98 வீதம் ஜெர்மனியரைக் கொண்ட ஆஸ்திரியாவின் அதிபர் தேர்தலில் என்னதான் இஸ்ரேலியரின் குறுக்கீடுகளும், விஷமப்பிரசாரங்களும் இருந்தபோதிலும் நாஜிபடையில் அவர் பணிபுரிந்ததையைப் புறக்கணித்து விட்டு நாட்டுக்கும், உலகுக்கும் ஐ நா. மூலம் ஆற்றியுள்ள பணியை அந்நாட்டு மக்கள் அங்கீகரித்துள்ளார்கள் என்பதே அவர் பெற்றுள்ள வெற்றியின் இரகசியமாகும்.

## செஞ்சிலுவை அடையாளங்கள்!

தமிழ்ப் பகுதிகளிலுள்ள மருத்துவமனைகளின் கூரைகளின் மீது செஞ்சிலுவை அடையாளங்கள் தீட்டப்பட்டு வருகின்றன.

அண்மையில் யாழ். நகரில் விமானத் தாக்குதல் நடத்தப்பட்ட சமயத்தில் பெரியாஸ்பத்திரி மீது குண்டு விழுந்ததையடுத்தே அதிகாரிகள் இந்த நடவடிக்கையை எடுத்துவருகின்றார்கள்.

செஞ்சிலுவை அடையாளம் இருப்பதால் மட்டும் தாக்குதல் நடத்தப்பட மாட்டாது என்பதற்கு என்ன உத்தரவாதம்!

ஊரடங்கு நேரத்தில் ஆஸ்பத்திரிக்கு அவசரமாக செல்பவர்கள் தாம் செல்லும் கார்களில் வெள்ளைக் கொடியைக் கட்டிக் கொண்டு போகலாம். ராணுவத்தினர் தாக்கமாட்டார்கள் என்ற உறுதிப்பாட்டை நம்பி கர்ப்பிணிப் பெண்ணை வெள்ளைக்கொடியுடன் காரில் கொண்டு சென்ற கார்ச்சாரதி ஒருவர் ஆஸ்பத்திரி அருகில் வைத்தே சுட்டுக்கொல்லப்பட்டதும், வேறு இருவர் சூட்டுக் காயங்களுக்குள்ளானதும் சமீபகாலத்து சம்பவங்கள்தான்.

வானத்தில் பறந்து குண்டு வீசும் விமானங்களும், ஹெலிகொப்டர்களும் ஆஸ்பத்திரியின் கூரை மீது காணப்படும் சிலுவை அடையாளங்களைக்கண்டு அங்கு குண்டு வீசாமல் விடுவதாக வைத்துக்கொண்டாலும் ராணுவ முகாமிலிருந்து வீசப்படும் 'ஷெல்' குண்டுகளுக்கு கண் கிடையாதே!

வீடுகள், தொழில் நிலையங்கள்.பத்திரிகாலயங்கள், பள்ளிக் கூடங்கள் மட்டுமல்ல, ஆஸ்பத்திரிகளுமே அவைகளுக்கு ஒன்றுதான்.

# தீவுப்பகுதிபாடசாலைகள்நிலை; பணிப்பாளர் தரும் விளக்கம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்டத்தில் இன்று தோன்றியுள்ள பதற்றநிலைகாரணமாக பாதுகாப்பற்ற சூழ்நிலையில் கல்வி வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளது. காங்கேசன்துறை கல்வி வட்டாரப் பாடசாலைகளும், கோப்பாய் கல்வி வட்டாரத்தில் உள்ள சில பாடசாலைகளும் ஊர்காவற்றுறைத் தொகுதியிலுள்ள பாடசாலைகளும் இயங்கமுடியாதநிலை ஏற்பட்டுள்ளது''.

இவ்வாறு யாழ். மாவட்ட கல்விப்பணிப்பாளர் திரு. இரா. சுந்தரலிங்கம் நமது நிருபருக்கு அளித்த பேட்டியில் கவலைதெரிவித்தார்.

கல்விப்பணிப்பாளர் திரு. இரா. சுந்தரலிங்கம் அப்பேட்டியில் மேலும் தெரிவித்திருப்பதாவது:

''ஊர்காவற்றுறைத் தொகுதியில் பெரிய பாடசாலைகளும் சிறிய பாடசாலைகளுமாக 64 பாடசாலைகள் இயங்கிவருகின்றன. அண்மைக்காலத்தில் தீவுப்பகுதிப் போக்குவரத்தில் ஏற்பட்ட தடைகளும், அங்கு நிலவும் பதற்றமான நிலைமையும் பாடசாலைகள் இயங்கமுடியாத நிலையில் உள்ளது.

வேலணை சேர் வைத்திலிங்கம் துரைச்சாமி மகாவித்தியாலய அதிபர் மண்டைதீவு மகாவித்தியாலய அதிபர் ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் மகளிர் கல்லூரி அதிபர், அல்லைப்பிட்டி, பண்கும்பான் ஆகிய பகுதிகளில் உள்ள பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் பாடசாலைகளுக்குப் போகமுடியவில்லையென்று விடுத்த வேண்டுகோளையும் தற்போதைய பதற்றநிலையையும் கருத்திற்கொண்டு மனிதாபிமான நோக்குடன் மாணவர்களின் கல்வி பாதிக்கப்படப்போகிறதே என்ற மனவேதனையுடன் தவிர்க்க முடியாத காரணத்தினாலும் பாடசாலைகளை தற்காலிகமாக மூடிவிடுவது என்ற துர்ப்பாக்கிய முடிவுக்கு என்னைத் தள்ளியது.

''மாணவர்கள் தங்களுக்குப் பாதுகாப்பான பாடசாலைகளில் கல்வியைதற்காலிகமாக கற்பதற்கான ஒழுங்குகளும் தற்காலிகமான ஆசிரிய இடமாற்றஒழுங்குகளும் பிரதமகல்வியதிகாரிகளின் ஆலோசனையுடன்மேற்கொள்ளப்பட்டன.

ஊர்காவற்றுறைத் தொகுதியில் உள்ள 64 பாடசாலைகளிலும் கல்விபயிலும் சுமார் பத்தாயிரம் மாணவர்களின் கல்வி அப்பகுதி பெற்றோர்கள் மாணவர்கள் ஆசிரியர்களின் ஒத்துழைப்பிலேயே தங்கியுள்ளது.

தற்போதைய பதற்றமான சூழ்நிலையை ஆசிரியர்கள் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தித் தமக்கு இடமாற்றம் வேண்டுமென்று கோரக்கூடாது

''தீவுப்பகுதிப் பாடசாலைகளின் ஆசிரியப் பற்றாக்குறையைப்போக்குவதற்கு 350 ஆசிரியர்கள் வெற்றிடம் உண்டு, என்றும் அவ்வெற்றிடங்கள் நிரப்பப்படவேண்டும் என்றும் கல்விச்சேவை ஆணைக்குழுவுக்கும், கல்வி அமைச்சின் செயலாளருக்கும் விஷேட அறிக்கை சமர்ப்பித்து வேண்டிய முயற்சிகளில் ஈடுபட்டுள்ளேன்.

தீவுப்பகுதி மாணவர்களின் கல்வி நிலையை மேம்படுத்தும் நோக்குடன் பட்டதாரி ஆசிரியர்கள் எட்டுப்பேருக்கும் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் பயிற்றப்பட்ட ஆசிரியர்களில் பத்துபேருக்கும், ஓய்வுபெற்ற ஆறு ஆங்கில ஆசிரியர்களை ஒப்பந்த அடிப்படையில் நியமனம் செய்துள்ளேன்.

''இன்றைய காலகட்டத்தில் எத்தகைய கஷ்டங்கள் எமக்கு வந்தாலும் அதற்காக நாம் மனம் தளரக்கூடாது. ஆலயத் திருப்பணிகளுக்கு ஆலயங்களில் உண்டியல் வைத்துப் பணம்சேர்ப்பது போல், எமது பாடசாலைகளிலும் கல்விப் பணிகளுக்கும் அபிவிருத்திகளுக்கும் உதவக்கூடிய வகையில் பாடசாலைகளில் கல்விப் பணிக் கலசம் வைத்துப்பணம் சேகரிக்கும் பழக்கத்தை மேற்கொள்ளவேண்டும் என்றும் கல்விப்பணிப்பாளர் அப்பேட்டியின்போது தெரிவித்தார்.

(வா)

## மக்கள் கருத்து

### பண்டத்தரிப்பு மக்கள் அவை

தங்கள் 4-6-86 திகதிய ஈழநாடு பத்திரிகையில் மக்கள் கருத்து பகுதியில் பண்டத்தரிப்பு பரிஷ் ப. ப. நோ. கூ. சங்கம் என்ற தலையங்கத்தில் சங்கத் தலைவர் தெரிவித்த கருத்துக்கள் தொடர்பாக பண்டத்தரிப்பு மக்கள் அவையின் தலைவர் என்றமுறையில் பின்வரும் விடயங்களை அறியத்தருகின்றேன்.

பண்டத்தரிப்பு மக்கள் அவையின் செயற்குழுக் கூட்டம் கடந்த 1-5-86 திகதியன்று மாலை பண்டத்தரிப்பு புனித அந்தோனியார் வர்த்தக கல்வி நிலைய மண்டபத்தில் நடைபெற்றது என்பதையும், அதில் பண்டத்தரிப்பு ப, நோ. கூ. சங்கமின்தறி ஆலைபற்றியும், பலவருட காலமாக பல இலட்சம் ரூபா நஷ்டத்தில் சங்கம் இயங்கி வருவது குறித்தும் இதனால் உறுப்பினர்களுக்கும் பொது மக்களுக்கும் ஏற்படும் பாதிப்பு பற்றியும் ஆராயப்பட்டு குறிப்பிட்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டது என்பதையும் உறுதிப்படுத்துகின்றேன். பண்டத்தரிப்பு மக்கள்அவை அதிகாரமற்ற ஒருசபை என்று ப. நோ. கூ. சபைத்தலைவர் தமது அறிக்கையில் தெரிவித்தது தவறானது.சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபரின் அறிவுறுத்தலின்படி கடந்த 1985ல் அங்குரார்ப்பணம் செய்யப்பட்ட பண்டத்தரிப்பு சமாதானசபை பல துறை மக்கள் சேவைக்கென இணைப்புக் குழுக்களுடன் பண்டத்தரிப்பு மக்கள் அவையாக கடந்த 9-3-86 திகதியன்று புனரமைப்பு செய்யப்பட்டது. இதுதொடர்பான செய்தியும் தங்கள் ஈழநாடு 22-3-86 திகதியில் வெளியிட்டிருந்தது.

அ. வ. துரையப்பா,
தலைவர்,
பண்டத்தரிப்பு மக்கள் அவை

### நூல் அறிமுக விழா

[சுழிபுரம்]

சிவத்திரு சி. சிவபாதசுந்தரக்குருக்கள் தமது சஷ்டியாத்தப்பூர்த்தியை யொட்டி தொகுத்து வெளியிட்ட அபரக்கிரியை நூல் அறிமுக விழா வழக்கம்பரையில் நடைபெறவுள்ளது.

இவ் அறிமுக விழாவின் போது சிவத்திரு சி சிவபாதசுந்தரக் குருக்களவர்கள் கௌரவிக்கப்படவும் உள்ளார். [க]

### வெட்டுக்குளம் ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள்

ஆலயங்கள் பல கொண்ட நல்லூருக்கும் விவசாய வளமிக்க அரியாலைக்கும் மத்தியில் கோவில் கொண்டெழுந்தருளியிருக்கும் வெட்டுக்குளம் அருள்மிகு ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் அடியார் நினைத்துப் பூஜிப்பதை சொரிபவள். ஆதலால் அடியார் கூட்டம் அவளைநோக்கிப் படையெடுக்கிறது.

மூலஸ்தானத்தைக் குளிர வைத்துப் பரந்து, விரிந்து, நிறைந்து நிற்கும் இத்தியுடன் பிணைந்து வளர்ந்தோங்கியுள்ள பல்வகை மர நிழலில் சிறிது நேரம் நின்றிருந்தாலே அவலங்கள் பறந்து போய் ஆறுதல் வந்து சேரும்

அடியார் மன எண்ணத்தை நிறைவேற்றும் அன்னையவள் அண்மைக்கால நிகழ்வுகளில் இருந்து தன்பக்தர்களுக்கு எதுவித துன்பங்களும் நேரா வண்ணம் காத்து வருகின்றாள்

இந்தக் காத்தருளலுக்காக அன்னையர் திருப்பூந்தண்டிகையில் வீற்றிருந்து 20ந் திகதி மாலைநேரம் நகர் வீதி சுற்றுலா செய்யவுள்ளாள்

சிங்கவாகனத்தில் துர்க்கா ரூபம் கொண்டு பகைவனைத் தன் பக்தர் பக்கம் வராது காத்தருளும் ஸ்ரீபுவனேஸ்வரி அன்னையவளின் வருடாந்த உற்சவம் இன்று நண்பகல் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 11 நாட்கள் வரை நடைபெறும். அடியார்கள் அவளருள் பெற்றுய்வார்களாக!

—பவளம்

### பாராட்டுத் தீர்மானம்

[கிளிநொச்சி]

அக்கராயன்குளம் கொத்தணிப் பாடசாலைகளின் முன்னேற்றத்திலும் இப்பகுதி வளர்ச்சியிலும் பெரும் அக்கறை கொண்டு சேவையாற்றி வரும் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திரு ஜெயநாதன், மேலதிக அரசாங்க அதிபர் எஸ். அமிர்தலிங்கம், மாவட்டக் கல்விப் பணிப்பாளர் ஜனாப் எம். எம். மன்சூர் ஆகியோரை அக்கராயன்குளம் பகுதி கொத்தணிப் பாடசாலைகள்அமைப்பு பாராட்டி உள்ளது

அக்கராயன்குளம் கொத்தணி அமைப்பின் கூட்டம் கொத்தணி அதிபர் ஏ கே. இராசேந்திரம் தலைமையில் நடைபெற்றபோதே இப்பாராட்டுத் தீர்மானம் நிறைவேறியது. [க]

### தீவுப்பகுதி தபால் சேவை மீண்டும் ஆரம்பம்

[மண்டைதீவு]

தீவுப் பகுதிக்கான தபால் சேவைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பண்ணைத் தாம்போதி போக்குவரத்துத் தடையால் தீவுப் பகுதிக்கான தபால் போக்குவரத்தும் கடந்த பல நாட்களாகத் தடைப்பட்டிருந்தது.

அராலிக் கடலுனூடாகத் தீவுப் பகுதிக்கான தபால் பொதிகள் ஏற்றிச் செல்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதால் கடந்த இரு தினங்களாகத் தீவுப் பகுதிக்கான தபால் விநியோகம் மீண்டும் ஆரம்பமாகியுள்ளது.

மண்டைதீவுக்கான தபால் பொதிகள் வேலணைத் தபால் நிலையத்திலிருந்து பெறப்படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்கலைக்கழக ஊழியர்சங்கம் வேலைநிறுத்தம்

[யாழ்ப்பாணம்]

கடந்த மாதத்தில் யாழ். பல்கலைக்கழகத்தில் நடந்த சில அசம்பாவிதங்கள் சம்பந்தமாக பல்கலைக்கழகம் எதுவித நடவடிக்கையையும் எடுக்காததால் வேலைநிறுத்தத்தில் ஈடுபடுவதென யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்கம் தீர்மானித்துள்ளது.

மேற்படிசங்கம் நேற்றுக் காலை கூடியபோதே இம்முடிவு எடுக்கப்பட்டது. இதுசம்பந்தமாக சங்கம் விடுத்துள்ள அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது.

''கடந்த மாதம் 20-ம், 21-ம் திகதிகளில் யாழ். பல்கலைக்கழகத்தில் ஊழியர்களுக்கும் பல்கலைக்கழக சொத்துகளுக்கும் பாதிப்பு ஏற்படும் வகையில் சில மாணவர்களினது அத்துமீறல் நடவடிக்கையைக் கண்டித்து ஏற்கனவே இரு தினங்கள் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்ட யாழ். பல்கலைக்கழக ஊழியர்கள், இதுசம்பந்தமாக நடவடிக்கை எடுக்கும்படி, பல்கலைக்கழக நிர்வாகத்திற்கு மகஜர் ஒன்று கையளித்து இம்மாதம் 6-ம் திகதி வரை அவகாசம் வழங்கியிருந்தனர்.

''ஆயினும் இன்றுவரை பல்கலைக்கழக நிர்வாகம் எதுவிதநடவடிக்கையும் எடுக்கத் தவறியதை அடுத்து சம்பந்தப்பட்டோர் மீது தகுந்த நடவடிக்கை எடுக்கும்வரை வேலைநிறுத்தத்தில் ஈடுபடுவதென எமது சங்கம் ஏகமனதாக தீர்மானித்துள்ளது.''

## உதவிகள்---

[1ம் பக்கத் தொடர்ச்சி]

உதவும் நாடுகளின் கவனத்தைப்பெற்றுள்ளது. எனவே இனப்பிரச்னைக்கு தீர்வு காணப்படும் பட்சத்திலேயே தொடர்ந்து காத்திரமான உதவிகளை வழங்க முடியுமென்று இலங்கைக்கு உதவும் நாடுகள் தெரிவித்துள்ளன.

''ஜனாதிபதி வெளிநாட்டு உதவிகளைக் கோரி பல அறிக்கைகளை விடுத்துள்ளார். ஆனால் எவ்வளவு தூரம் உதவிகள் கிடைக்குமென்று என்னால் எதனையும் உறுதியாகக் கூற முடியாது.

'இலங்கையில் வடக்கு-கிழக்கில் பெரும் நெருக்கடி நிலை காணப்படுகிறது இதனால் இப்பகுதிகளிலிருந்தும் அரிசி முதலான ஏனைய அத்தியாவசியப் பொருட்களை நாட்டின் ஏனைய பகுதிகளுக்கு பெற்றுக் கொடுக்கமுடியாதுள்ளது.

''எனவே அரசு ஏற்கனவே நிலவும் நிதி நெருக்கடியுடன் பெருமளவு பணத்தை இறக்குமதிக்குச் செலவிடவேண்டியுள்ளது.

''இத்தகைய இக்கட்டான நிலையில் நாட்டு மக்களிடம் பெரும் பட்டினி அபாயம் குறித்து எச்சரிக்கைவிடவேண்டியநிலை காணப்படுகின்றது மக்கள் தமது இடுப் ப்பட்டிகளை இறுக்கிக் கட்டிக்கொள்ள வேண்டுமென்று கேட்குமளவிற்கு நான் தள்ளப்பட்டுள்ளேன்''.

''இத்தகையசூழ்நிலையில் எவ்வளவு விரைவில இனப்பிரச்னையைத் தீர்க்க முடியுமோ அவ்வளவு விரைவில் அதனைத் தீர்ப்பதே எமது நாட்டுக்கு விமோசனமாக அமையமுடியும்''


**வெலிங்டன்**

10-30, 2-30, 6-15

மோகன் - பூர்ணிமா - சுஜாத்தா-ஜெய்சங்கர் நடித்த

**விதி**

(கலர் - புதிய பிரதி)

**லிடோ**

காலை 10-30. 2-30, 6-30

கமல்-ரஜனி-ஸ்ரீதேவி-ஜெய்கணேஷ்-நாகேஷ் நடித்த

**தாயில்லாமல் நானில்லை**

(கலர்)

**லிபேட்டி சினிமாவில்**

[வெலிங்டன் சந்திக்கு அருகாமையில்]

Wills Rose in THE NORLEMAN

பயங்கரமானமுறையில் மோதும் இரு குழுக்களுக்கான சண்டையை சித்தரிக்கும் காவியம்.

10-30, 2-30, 4-30, 6-45


## சரத் அஞ்சலி கூட்டம்

[யாழ்ப்பாணம்]

அமரர் சரத்முத்தெட்டுவேகமவின் அஞ்சலிக்கூட்டம் ஒன்று இன்று நல்லூர் இந்துவிடுதியில் திரு. இ சீவரட்ணம் தலைமையில் நடைபெறவுள்ளது,

பேராசிரியர் கா. சிவத்தம்பி யாழ் மாநகர ஆணையாளர் சி. வி, கே. சிவஞானம் உட்பட பலர் இக் கூட்டத்தில் அஞ்சலி உரை நிகழ்த்தவுள்ளனர். [து]

## இன்று சங்காபிஷேகம்

(வல்வெட்டித்துறை)

வல்வெட்டித்துறை நெடியகாடு திருச்சிற்றம்பலப் பிள்ளையார் கோவிலிலும் வல்வை ஸ்ரீ வாலாம்பிகா சமேதசிவன் ஆலயத்திலும் சங்காபிஷேகம் இன்று காலை 8 மணிக்கு நடைபெறும்.

மாலையில் இரு ஆலயங்களிலும் தண்டிகைத் திருவிழாவும் திரு ஊஞ்சல் உற்சவமும் நடைபெறவுள்ளது.

## கையொப்பமிட ஏற்பாடு

[யாழ்ப்பாணம்]

யாழ். மாவட்டத்துக்கு கடந்த ஒருவாரத்துக்கு முன்னர் வெளிமாவட்டங்களிலிருந்து லீவில் வந்து சேர்ந்த அரசாங்க, திணைக்கள ஊழியர்கள், போக்குவரத்து நிலைமை சீராகும்வரை யாழ். செயலகத்தில் தம்மை உறுதிப்படுத்துவதற்கான கையொப்பமிடுவதற்கு யாழ். அரசாங்க அதிபர் நடவடிக்கை எடுத்துள்ளார்.

யாழ் செயலகத்திலுள்ள மேலதிக அரசாங்க அதிபர் பணிமனையில் இவர்கள் கையொப்பமிடலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது' [மா]

## 8 பேர் பெரு...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

கடந்த இருநாட்களுக்குமுன்னர் தங்களுக்கு இக்காயங்கள் ஏற்பட்ட போதிலும் போக்குவரத்து வசதியின்மையால் பரந்தன் சங்குப்பிட்டியூடாக கேரதீவுவரை கால்நடையாக வந்துபின்னர் லொறிகள் மூலமாக யாழ்ப்பாணம் வந்து சேர்ந்ததாக அந்த நோயாளர்கள் தெரிவிக்கிறார்கள்.

இவர்களின் உடலிலிருந்து அதிக இரத்தம் வெளியேறியதால் மிகவும் களைப்படைந்தநிலையில் சோர்ந்திருக்கக் காணப்பட்டார்கள்.

## வேல் ஆனந்தனின் 'என்னதான் முடிவு' நாட்டியம்

வேல் ஆனந்தன் அமையம் தயாரித்து அளிக்கும் ''என்னதான் முடிவு'' நாட்டியம் இன்று பிற்பகல் 2-30 மணிக்கு சுண்டுக்குளி மகளிர் கல்லூரி மண்டபத்தில் ஆரம்பமாகின்றது.

இன்றைய நிகழ்ச்சிக்கு நடிகமணி வி. வி. வைரமுத்து தலைமைதாங்குகிறார். வடமாநிலக் கல்விப்பணிப்பாளர் திரு. ஆர் சுந்தரலிங்கம் பிரதம அதிதியாக கலந்து சிறப்பிப்பார். ரெலிக்குளோப் நிறுவனத்தின் அதிபர் திரு. ம. சிவராஜாவும் பாரியாரும் மங்களதீபமேற்றி நிகழ்ச்சியினை ஆரம்பித்து வைப்பர்.

யாழ்.மறைமாவட்ட பேராயர் வ. தியோகுப்பிள்ளை ஆண்டகை ஆசியுரை வழங்குவார். 11ம் 12ம் திகதிகளில் பொது மக்களுக்கான நிகழ்ச்சிகள் இடம் பெறும்.

# இளிநொச்சிப் பகுதியில் மயான அமைதி

[அலுவலக நிருபர்]

கிளிநொச்சிப் பகுதியில் கடந்த 5 நாட்களாக இராணுவத்தினருக்கும் தமிழீழ விடுதலை புலிகள் இயக்கப் போராளிகளுக்குமிடையே நிகழ்ந்து வந்த மோதல்கள் நேற்றுத் தணிந்திருக்கக் காணப்பட்டது.

இராணுவத்தினர் முகாமிலிருந்து வெளிவராததால் நேற்று மோதல் இடம்பெறவில்லை என்று போராளிகள் தரப்பிலிருந்து தெரிவிக்கப்படுகிறது.

கிளிநொச்சி நகர வீதிகள் எல்லாம் நேற்று ஆளரவமற்று வெறிச்சோடிக் காணப்பட்டன. மயான அமைதி அங்கு நிலவுகிறதென்றே கூறலாம்

கடந்த 4ம் திகதி தொடக்கம் 8ம் திகதி வரை முகாமிலிருந்து வெளியே வந்த இராணுத்தினரை போராளிகள் நவீன ஆயுதங்களைக் கொண்டு தாக்கினார்கள். இதனைத்தொடர்ந்து இரு தரப்பினருக்குமிடையே பலத்த மோதல் மூண்டது தெரிந்ததே தாக்குதல்களால் பாதிக்கப்பட்டு வீடு, வாசல்களை விட்டு வெளியேறிய ஆயிரக்கணக்கான குடும்பங்கள் அகதிகளாகி பாடசாலைகளில் தஞ்சம் புகுந்துள்ளனர். பாதுகாப்பான இடங்களை நோக்கி பல நூற்றுக்கணக்கான குடும்பங்கள் சென்று கொண்டிருக்கின்றன.

கிளிநொச்சியில் எதுவும் எந்நேரமும் நடக்கலாம் என்ற ஏக்கத்துடன் பலகுடும்பங்கள் கவலையில் மூழ்கியுள்ளன. (மா)

# வல்வை இராணுவ முகாம் மின்சாரம் துண்டிப்பு

[வல்வெட்டித்துறை]

வல்வெட்டித்துறை ராணுவ முகாமிற்கான மின் விநியோகம் போராளிகள் இயக்கமொன்றினால் துண்டிக்கப்பட்டதையடுத்து முகாமிலுள்ள பிரகாசமான மின்விளக்குகள் எரியவில்லை. முகாமிலுள்ள ஜெனரேற்றர் மூலம் பெறப்படும் மின்சாரத்தைக் கொண்டுஒளி குறைந்த மின்விளக்குகள் இம்முகாமில் எரிவதைக் காணக் கூடியதாகவுள்ளது.

இதனிடையே நேற்று முன்தினம் மாலை கடற்படையினரின் பீரங்கித்தாக்குதலுக்கிலக்காகி பிளாஸ்ரிக் படகு ஒன்று முற்றாக எரிந்தது அதிர்ஷ்டவசமாக உயிர்ச்சேதம் ஏதும் ஏற்படவில்லை அத்துடன் நேற்றுக்காலையும் வல்வைக்கடலில் நிலைகொண்டுள்ள கடற்படைப் படகிலிருந்து சுடப்பட்டதால் மீனவர் ஒருவரின் படகுசேதமடைந்தது. இம்மீனவர் தொண்டமானாற்றைச் சேர்ந்தவர்.

## புதிய அதிபர்

(சுழிபுரம்)

பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலய புதிய அதிபராக இம்மாதம் 4ம் திகதி முதல் திரு எஸ். இராசநாயகம் பொறுப்பேற்றுள்ளார். [க]

## சனசமூக நிலையத்துக்கு போரூட் உதவி

(அராலி)

அராலி வடக்கு வான்மதி சனசமூக நிலையத்தினர் போரூட் நிறுவனத்தின் உதவியோடு பாலர் பாடசாலை ஒன்றை நடாத்திவருகிறார்கள். இப் பாலர் பாடசாலையில் 29 பாலர்கள் ஆரம்பக் கல்வியை கற்கின்றார்கள். போரூட் நிறுவனம் இப் பாலர் பாடசாலைக்கு ஓர்ஆசிரியரையும் நியமித்துள்ளது. பாலர் பாடசாலையில்கல்வி பயிலும் பாலர்களுக்கு நாளாந்தம் மதிய உணவும் கொடுத்து சிறந்த முறையில் கல்வி வசதிகளை போரூட் நிறுவனம் ஒழுங்கு செய்து கொடுத்துள்ளது. அத்துடன் அவர்கள்மேலும்பல அபிவிருத்தித் திட்டங்களை வான்மதி சனசமூக நிலையத்தினருக்குச் செய்ய முன் வந்துள்ளதாகத் தெரிகிறது.

## உடலுறுதி அவசியம்

[உடுவில்]

உடலுறுதியும் தேகாரோக்கியமும் கொண்ட இளைஞர்களை இன்று நம்மத்தியில் அவசியம் தேவைப்படுகின்றனர். இளைஞர்கள்அவற்றை பெற்றுக்கொள்ள விளையாட்டுகள் அவசியமாகின்றன. இளைஞர்கள் விளையாட்டுக்களை கழகங்கள் மூலமாக செயல் படுத்துவதனால் கட்டுக்கோப்பு, ஒழுங்கு, நிதானம் ஆகியவற்றைப் பெற்றுக் கொள்ள முடியும் ''

உடுவில் உதவி அரச பிரிவிலுள்ள கந்தரோடைக் கிராமத்தில் நடைபெற்ற விளையாட்டுப் போட்டிகளுக்கு பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய உடுவில் உதவியரசாங்க அதிபர் திரு. அ. மகாலிங்கம் இவ்வாறு கூறினார். [ச]

## திருநெறிக்கழக பணிகள்

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் இந்து சமய வளர்சிக்காக திருநெறிச்கழகம் பல ஆக்கபூர்வமான பணிகளை வழங்கிவருகிறது என்று கிளிநொச்சி திருநெறிக்சழகம் ஏற்பாடு செய்த கூட்டத்தில் உரையாற்றுகையில் கிளிநொச்சி கிருஷ்ணன் ஆலயபரிபாலன சபைத் தலைவரான அதிபர் என் சோதிநாதன் கூறினர்-

கிளிநொச்சி முருகன் ஆலயத்தில் திருநெறிக்கழகத்தலைவர் திரு பி. கணேசபிள்ளை தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது.

கோப்பாய் சிவம், கவிஞர் கண்டாவளைக் கவிராயர் உட்பட பலர்உரையாற்றினர்கள்.


புனித இயக்கங்களிடம்

**பணிவான வேண்டுகோள்**

வடமராட்சி அல்வாய் தெற்கு ''இராணிமனை''யில் வயதில் முதிர்ந்த நானும் எனது மனைவியும் தனிமையாக வாழ்ந்து வருகிறோம். எமது வளவிலுள்ள பயிர்களுக்கு தண்ணீர் இறைக்கும் ''சிக்மா'' மின்சார மோட்டோரை [இல U 183] நள்ளிரவில் வந்த சிலர் களவாடிச்சென்றுள்ளனர். பறிபோன பொருட்கள் மீளவும் கிடைத்துவரும் இன்றைய நிலையிலும் எனது மோட்டோர் இன்னமும் கிடைக்காதது மிகுந்த வேதனையைத் தருகின்றது இதனைத் தேடிக்கண்டு பிடித்து ஒப்படைப்போருக்கு ரூபா ஆயிரம் வழங்கப்படும் என்பதை பணிவுடன் அறியத்தருகிறேன்.

பண்டித ''ஞானி''

''இராணிமனை''
அலவாய் தெற்கு.

[C 2794]

**உரும்பராய் இந்துக்கல்லூரி பவளவிழா பொருட்காட்சி**

9 - 6 - 86 திங்கட்கிழமை தொடக்கம் அலைமோதும் ஜனத்திரளுடன் பரபரப்போடு நடைபெற்றுக் கொண்டிருக்கும் பொருட்காட்சியில் பின்வரும் நிறுவனங்களும் அமைப்புக்களும் கலந்து கொள்கின்றன.

பனம் பொருள் அபிவிருத்திசபை, மில்க்வைற் தொழிலகம், மனோகரன் அன் வெற்றிவேல். J.C C Ltd, பூபாலசிங்கம் புத்தகசாலை, Silky Ice Cream and Cool Bar. 'ஊற்று' ஜனதா இன்டஸ்றீஸ், டயனமிக் என்ஜினியரிங் லிமிட்., யாழ் மருத்துவ பீடம், உரும்பராய் இந்து ஆசிரியர் — மாணவர்கள்.

பல கல்லூரிகள் வந்து பார்வையிட்டு மகிழ்ந்து செல்லும் இவ்வேளையில் இதுவரை வருகைதராத பழைய மாணவ மாணவிகளே! கடந்துபோன இனிய இளவேனிற்காலங்கள் இனிமேல் எமக்குவரா. ஆனால் கல்லூரி வாழ்க்கையில் நடைபெற்ற இனிய நினைவுகள் எம்மை விட்டு அகலா. அவ்இனிய வசந்தகாலங்களை நினைவுகூர, கலந்துபழக இன்றே உரும்பராய் இந்துக்கல்லூரியின் பவள விழா பொருட்காட்சிக்கு வருகை தாருங்கள்.

காலம்: காலை 8–30 முதல் பிற்பகல் 5–30 வரை.

S. K. மனோகரபூபன்,
காரியதரிசி,
உரும்பராய் இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கம்.

[C 2795]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தீவுப்பகுதியில் தொடர்ந்தும்

# பாடசாலைகள் நீதிமன்றங்கள் வங்கி,செயலகங்கள் ஸ்தம்பிதம்

[வேலணை]

தீவுப்பகுதிக்கும் யாழ்ப்பாணத்துக்குமிடையிலான வாகனப் போக்குவரத்து கடந்த 15 நாட்களாக நடைபெறுததினுல் தீவுப்பகுதிக்கும் வெளியிடங்களிற்குமிடையிலான தொடர்புகள் யாவும் துண்டிக்கப்பட்டுள்ளது.

இங்குள்ள அரசாங்க காரியாலயங்கள் பாடசாலைகள் அனைத்தும் மூடப்பட்டுள்ளன.

பதற்ற நிலையினுல் காரியாலயத்திலும் பாடசாலைகளிலும் கடமையாற்றும் உத்தியோகத்தர்கள் ஆசிரியர்கள் சமூகமளிக்கவில்லை. வங்கிகள் நீதிமன்றங்களும் மூடப்பட்டுள்ளன.

இதேவேளைஊர்காவற்றுறை நகரில் இயங்கி வந்த மக்கள் வங்கி சட்டிடத்தின் முன் பக்கமும் ஷெல் தாக்குதலினல் சேதமடைந்துள்ளது. அவ்வங்கியில்பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த மாதகலைச் சேர்ந்த கதிரவேலு தம்பிப்பிள்ளை என்பவரையும் அவருடன் நகரில் வியாபாரத்தில் ஈடுபட்டிருந்த இராஜயோகம், மகன் மரியதாசன் ஆகியோரையும் ஆயுதப்படையினர் கூட்டிச் சென்ற போது வங்கி பாதுகாப்பு ஊழியர் நடுக்கடலில் வைத்து இறக்கிவிடப்பட்டாராம்.

கடத்திச் செல்லப்பட்ட மற்ற இருவரது விபரங்களும் இன்றுடன் ஐந்து நாட்களாகியும் எதுவித தகவலும் தெரியவில்லை

தீவுப்பகுதிக்கும் வெளியிடங்களுக்குமிடையிலான தொலைபேசி தொடர்புகள் வாகனப்போக்குவரத்துச் சேவைகள் இல்லாததினுல் தீவுப்பகுதி மக்கள் பட்டினிச்சாவை எதிர் நோக்கியவாறு இருக்கின்றுர்கள். இது குறித்து வேலணை ஊர்காவற்றுறை பிரஜைகள் குழுத்தலைவர்கள் ஊர்காவற்றுறை தேவமாதா ஆலய பங்குத்தந்தை வண கிருபாகரன், அடிகளார் யாழ். மாவட்ட அரசாங்க அதிபரை நேரில் சந்தித்து தீவுப்பகுதி நிலை குறித்து ஆலோசித்தனர். (க)

## ‘பருத்தித்துறையில்கடற்படை படகுகள் தாக்கப்பட்டன”

### விடுதலை புலிகள் அறிக்கை

[யாழ்ப்பாணம்]

பருத்தித்துறை இராணுவ முகாமுக்கு கடல் மூலம் பொருள்கள் ஏற்றிச் சென்ற இரு வள்ளங்கள் மீதும், சிறிய பீரங்கிப் படகு மீதும் தமது இயக்கப் போராளிகளால் ‘றெக்கட்’ கனரகத் துப்பாக்கிகளால் தாக்குதல் மேற்கொண்டதாக தமிழீழ விடுதலைப் புலிகள்’ விடுததுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது

நேற்றுக்காலை இச்சம்பவம் இடம்பெற்றது

அவ்வறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

நேற்றுக் காலை பருத்தித்துறை கடல் பிராந்தியத்தில் கடற்படைக்குச் சொந்தமான இரு கப்பல்கள் தரித்து நின்றன இக் கப்பல்களிலிருந்து இரு வள்ளங்கள், சிறிய பீரங்கிப்படகு ஆகியன பொருள்கள் ஏற்றிக் கொண்டு பருத்தித்துறை முகாமுக்குச் சென்ற பொழுது ‘தமிழீழ விடுதலைப் புலிகள்’ இயக்கப் போராளிகள் தாக்குதல் நடாத்தினர். இத் தாக்குதலால் படகுகள் சேதமடைந்திருக்கலாம் எனத் தெரியவருகிறது.” (மா)

## வருடாந்த உற்சவம்

(யாழ்ப்பாணம்)

இருபாலை கட்டப்பிராய் அருள்மிகு ஸ்ரீ மூத்துமாரி அம்மன் ஆலய வருடாந்த உற்சவம் நாளை 11-ம் திகதி புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது [வா]

# “அரசியல் தீர்வில் அரசுக்குநம்பிக்கை

[கொழும்பு]

“தீவிரவாத செயல்கள் தற்போது இலங்கையில் அதிகரித்துள்ளபோதிலும், 1985 ம் ஆண்டு உலக நாடுகளிடமிருந்து பெற்றஅதே உதவியை இந்த ஆண்டும்பெற முடியும்” என்று நிதித்திட்டமிடல் அமைச்சர் திரு. றெனி டீமெல் கூறியுள்ளார்.

இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளது ஒன்றியத்தில் கலந்து கொள்வதற்காக அமைச்சர் மெல் விமானம் மூலம் புறப்பட்டார். அப்பொழுதே இந்த நம்பிக்கைத்யைதெரிவித்தார்.

கடந்த ஆண்டிலும் பார்க்க இவ்வாண்டு இனப்பிரச்னை சம்பந்தப்பட்ட விடயம் மிக மோசமான நிலையை அடைந்துள்ளது இருப்பினும் இப்பிரச்னைக்கு அரசியல் தீர்வு காண்பதில் இலங்கை அரசு அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டுள்ளது. இதனை சம்பந்தபபட்ட நாடுகளுக்கு தெரியவுப்படுத்துவதின் மூலம் உதவிகளைப் பெறலாம்” என்றும் அமைச்சர் றெனி டீமெல் தெரிவித்தார். (ரா)

## “சரத் மறைவு தமிழ் மக்களுக்கு பேரிழப்பாகும்”

[பண்டத்தரிப்பு[

“சுய நிர்ணய அடிப்படையில் தமிழர் பிரச்னை தீர்க்கப்பட வேண்டும் எனறும், தமிழ் இளைஞர்கள் போராளிகளே அன்றி தீவிரவாதிகள் அல்ல வென்றும் உறுதியுடன் துணிந்து குரல் கொடுத்த சரத் முத்தேட்டுவே கமவின் திடீர் மறைவு இந்நாட்டு தமிழ் மக்களுக்குப் பேரிழப்பாகும்.”

இவ்வாறு வட்டுக்கோட்டைத் தொகுதிபொது மக்கள் சார்பில்சங்கானையில் நடைபெற்றஅமரர் சரத்முத்தெட்டுவேகமவின் அஞ்சலிக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் மனித உரிமைகளுக்கான வெகுஜன இயக்கத்தின் செயலாளர் சட்டத்தரணி சோ. தேவராஜா கூறினுர்.

சங்கானை பொது சன நூல் நிலைய மண்டபத்தில் நடைபெற்ற இக் கூட்டத்திற்கு சுழிபுரம் வக்டோரியாக் கல்லூரி அதிபர் திரு. க. அருணுசலம் தலைமை தாங்கினுர்.

சரத் முத்தேட்டுவேகமவின் உருவப்படத்திற்கு மாலை அணிவித்து அமரர் கைலாசபதியின் தொகுப்பு நூல் ஒன்றை பொது நூலக உதவி நூலகர் திரு. எம். கணேசு சமர்ப்பணம் செய்தார். திரு. ச. கந்தசாமி வரவேற்புரை நிகழ்த்திஞர்.

வட பிரதேச தொழிற் சங்க சம்மேளன அமைப்பாளர் திரு. எஸ் விஜயானந்தன் உட்பட முன்னுள் பாடசாலை அதிபர் திரு. எஸ். சிவகுரு. திரு. கி. வயிரமுத்து, திரு. வி. சின்னையா திரு. வி. கனகரத்தினம் ஆகியோரும் உரையாற்றினுர்கள். (க)

## இன்றைய பலன்

மாதம்: வைகாசி 27
(10-6-1986)
செவ்வாய்
திதி: திருதியை பி. இ. வரை
நட்க்ஷத்திரம்: புனர்பூசம் பி. இ. வரை

மேடம்: கடமையாற்றுமிடத்தில் சிறப்பான இடம் கிடைக்கும். அறிஞர்கள் போற்றுவர். ஆதரவும்உண்டு.

இடபம்: அதிர்ஸ்டதேவதையின் அருள் உங்களுக்குக் கிடைக்கும். செல்வாக்குள்ளருவரின் ஆதரவு தப்பாமல் உண்டு. சகோதர சுகமும் உண்டு.

மிதுனம்: திருடர் பயத்திற்கு இடமுண்டு: தனிவழிப் பயணத்தைத் தவிர்த்துக் கொள்ளவும். அவசியம் பொறுமையைப் பேணவும்.

கடகம்: மனக்கோட்டை கட்டுவீர்கள். எதிர்பார்த்ததில் ஏமாற்றம் விளையும். அன்புச்சகோதரத்தின் உடல் நலம் பாதிக்கப்படலாம்.

சிங்கம்: அதிகாரப் பேறுக்கும் அதிக பொருள்வரவிற்கும் இடமுண்டு. ஆக்கப்பணியில் அதிகம் ஈடுபடுவீர்கள். குடும்பத்திலும் மகிழ்ச்சிநிலவும்.

கன்னி: தூக்கம் விழிகளைத் தழுவ மறுக்கும். கடந்தகால நிகழ்ச்சிகள் அலைமோதும். சகோதரவழியால் சஞ்சலத்திற்கும் இடமுண்டாம்.

துலாம்: மதிவழி நடப்பின் மற்றவர்கள் பொறுமைப்படுமளவிற்கு முன்னேற்றம் உண்டு. அன்னைவழி ஆதரவு தாராளமாகக் கிடைக்கும்.

விருச்சிகம்; புத்திரவழியால் புகழுண்டு புதிய பாதையில் தடையேற்படும். குடும்பத்தில் பிணைப்புக்கள் பலப்படும். சுபதினம்.

தனுசு: கௌரவத்தைப் பாதிக்கக்கூடிய சம்பவங்கள் இடம்பெறும் தூற்றல் கணை தொடுப்பதற்கு எதிரிகள் காத்திருப்பர். எதிலும் முன் யோசனை நன்று.

மகரம்: குடும்ப வாழ்க்கை இன்று சுகமாக இருக்கும். தூரத்து உறவினர் ஒருவரிடம் இருந்து உதவியும் கிடைக்கும். சிறப்பானதினம்.

கும்பம்: குறைகேட்க நேரிடும். கடமையில் தடைகள் தோன்றும். எதிர்பாராத நஷ்டத்திற்கும் இடமுண்டு.

மீனம்: நீண்டநாள் கனவு இன்று நனவாகும். சிலருக்கு வெளிநாடு செல்லும் வாய்ப்பு கிடைக்கலாம். குருவின் ஆசியுமுண்டு.

## மலையாளக் கலாலய தலைவர் அஞ்சலி

[யாழ்ப்பாணம்]

“அகதிகள் புனர்வாழ்வுக் கழகத்தலைவர் திரு. விஸ்வலிங்கத்தின் மறைவு கேட்டு அதிர்ச்சியும் வேதனையும்அடைகிறேம். பலவகையாலும் பாதிக்கப்பட்டு தமிழ்ப் பிரதேசங்களை நாடிவந்த அகதிகளின் நலனுக்காக மகத்தான சேவையாற்றினுர். பாதிக்கப்பட்ட மக்களை நேரில் கண்டு ஆறுதலும் நிவாரணங்களும் அளித்துவந்தார். முற்றிலும் எதிர்பாராத ஒரு சந்தர்ப்பத்தில்அன்னரின் மறைவு ஒரு பேரிழப்பாகும்”.

இவ்வாறு மலையாளக் கலாலயத் தலைவர் திரு. டீ. கே இராமகிருஷ்ணன் விடுத்துள்ள அனுதாபச்செய்தியில் குறிப்பிடுள்ளார்.

## நடமாடும் சிகிச்சை நிலையம்

[வவுனியா]

நடமாடும் சிகிச்சை நிலயச் சேவை நொச்சிக்குளம் கிராம சேவை உத்தியோகத்தர் அலுவலகத்தில் அண்மையில் நடாத்தப்பட்டது.

குழந்தைகளுக்கான தடுப்பூசி, மருந்துகள், கர்ப்பிணிகளுக்கான மருத்துவ ஆலோசனைகள் மற்றும் பலவிதமான நோய்களுக்கான சிகிச்சைகள் அனைத்தும் இடம் பெற்றன.

வவுனியா திட்டமிடல் பிரிவின் அனுசரணையுடன் இந்த நடமாடும் சிகிச்சை நிலையம் நடாத்தப்பட்டது.

சேமமடு கிராம சேவையாளர் திரு யோ. வி. ஆனந்தராஜா இதுதொடர்பான ஏற்பாடுகளை மேற்கொண்டார். (க)

## செஞ்சிலுவைச் சங்கம் காணமல் போனவர்களின் விபரங்களை கோருகின்றது

[யாழ்ப்பாணம்]

“1983 ம் ஆண்டுதொடக்கம் 1986 ம் ஆண்டு மே மாதம் வரை காணமல்போனவர்களின் விபரங்களைச் சேகரித்து பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு உதவ நடவடிக்கை எடுக்க வேண்டும்” என்று அண்மையில் நடைபெற்ற செஞ்சிலுவைச் சங்க யாழ்ப்பாணக் கிளைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இத் தீர்மானத்துக்கிணங்க காணமல் போனவர்களின் “பெயர், விலாசம், பால், வயது, திருமணமானவரா, குடும்ப விபரங்கள், காணமல் போன இடம், மாதம், ஆண்டு, பெற்ற நிவாரண உதவிகள்” போன்ற சகல விபரங்களைப் பின்வரும் விலாசத்துக்கு ஜூன் 25 ம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு கேட்கப்படுகின்றனர்.

“இணைச் செயலாளர், யாழ் செஞ்சிலுவைச் சங்கம் [வை. எம். சி. ஏ] யாழ்ப்பாணம்.” [மா]

## மாணவர்கள் சிரமதானநிகழ்ச்சி

[மண்டைதீவு]

யாழ். தொழில் நுட்பக் கல்லூரி மாணவர்களின் சிரமதான நிகழ்ச்சி ஒன்று அண்மையில் நடைபெற்றது.

இச் சிரமதான நிகழ்ச்சியை யாழ் தொழில் நுட்பக்கல்லூரி பொறியியல் மாணவர் மன்றமும், வணிக மாணவர் மன்றமும் இணைந்து ஏற்பாடு செய்திருந்தது.

கல்லூரி அதிபர் திரு. இராஜேந்திரா இச் சிரமதானத்தை ஆரம்பித்துவைத்தார். கல்லூரி ஆசிரியர்களும் இதில் பங்குபற்றினர்.

இச்சிரமதானத்திற்கான உபகரண உதவிகளை தொழிலதிபர் திரு. கே. கனகராசா வழங்கினுர்.

நூற்றுக்கணக்கான மாணவர்கள் கலந்துகொண்ட இச் சிரமதானத்தில் கல்லூரிப் பாதைகள், காணிகள், கட்டிடங்கள், விளையாட்டு மைதானங்கள் ஆகியன துப்பரவு செய்யப்பட்டு சீர்திருத்தப்பட்டன. [க]

## பருத்தித்துறை பிரஜைகள்குழு உறுப்பினர்கள்

(புலோலி)

பருத்தித்துறைப் பிரஜைகள் குழுவின் புனரமைப்புப் பொதுக்கூட்டம் யாழ். பல்கலைக்கழக விலங்கியற்றுறைப் பேராசிரியர் வீ. கே. கணேசலிங்கம் தலைமையில் பருத்தித்துறை பர்வதவர்த்தனி கலா மண்டபத்தில் நடைபெற்றது. நடப்புவருட நிர்வாகிகளாபின் வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்

தலைவர்: பேராசிரியர் வீ. கே. கணேசலிங்கம், உபதலைவர்கள்: சட்டத்தரணி எம். கே. முத்துக்குமாரு, எஸ். தேவதாசன், வி. விஸ்வலிங்கம், பொதுச்செயலாளர்: எஸ் சுப்பிரமணியம், துணைச் செயலாளர்கள்: ஏ. தேவராஜன், ஆர். விஜயரத்தினம், எஸ். கதிரேசு, இணைப்பொருளாளர்கள்: வீ எஸ். மகேசன் என். குணசீலன். உறுப்பினர்களும் தெரிவுசெய்யப்பட்டனர். (க)

## “கிராமப்புற பாடசாலைகள் அமைதி நிரம்பியவை”

[உடுவில்]

“கிராம சூழ்நிலையில் உள்ள பாடசாலைகள் அமைதி நிரம்பியவை, தூய்மையானவை. எனவே உயர் கல்விக்காக நகர்ப்புற கல்லூரிகளை நாடாமல் கிராமப்புற கல்லூரிகளில் தம் கல்வியைப் பெருக்கிக் கொள்ள மாணவர்கள் முன் வரவேண்டும்.”

“மானிப்பாய் இந்துக் கல்லூரியின் பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய வட மாநில கல்விப் பணிப்பாளர் திரு. ஆர். சுந்தரலிங்கம் இவ்வாறு கூறினுர்.

கல்லூரி அதிபர் திரு. எஸ். வீ. மகேசவேலு பரிசளிப்பு விழாவுககுத் தலைமை வகித்தார்.

மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன. உயர்தர மாணவர் ஒன்றியத்தின் தலைவர் செல்வன் பவளநாதன் நன்றியுரை கூறினுர். [க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ். மாவட்ட மெய்வல்லுநர் போட்டி:

# யாழ்ப்பாணம் முதலாவது இடத்தை தட்டிக்கொண்டது

(யாழ்ப்பாணம்)

"மிகவும் இக்கட்டான இன்றைய சூழ்நிலையிலும், இவ்வளவு பெருமளவில் விளையாட்டு வீரர்கள் இந்த விளையாட்டுப் போட்டியில் கலந்து கொண்டிருப்பதை பார்க்கும் போது நான் மிகவும் சந்தோஷமடைகின்றேன்."

இவ்வாறு, யாழ். மாவட்ட உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிடையே நடைபெற்ற மெய்வல்லுநர் விளையாட்டுப் போட்டிக்கு, பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட, யாழ். செயலக உதவி அரசாங்க அதிபர் திரு கே. கோபாலரட்ணம் கூறினார்.

யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற மேற்படி விளையாட்டுப் போட்டியில், யாழ்ப்பாண உதவி அரசாங்க அதிபர் பிரிவு 56 புள்ளிகளைப் பெற்று முதலாவது இடத்தையும், நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவு 40 புள்ளிகளைப் பெற்று 2-வது இடத்தையும், சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவு 36 புள்ளிகளைப் பெற்று 3-வது இடத்தையும் பெற்றன.

### சிறந்த விளையாட்டு வீரர்கள்

ஆண்கள் பிரிவில், சிறந்த விளையாட்டு வீரருக்கான பரிசை, சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவைச் சேர்ந்த ஸ்ரீதரனும், பெண்கள் பிரிவில், யாழ்ப்பாண உதவி அரசாங்க அதிபர் பிரிவைச் சேர்ந்த செல்வி ரூஜந்தி பெர்னண்டோவும் தட்டிக் கொண்டார்கள்.

யாழ். மாவட்ட பிரதம விளையாட்டு உத்தியோகஸ்தர் திரு எஸ். மரியதாஸ் தலைமையில் நடைபெற்ற இவ் விளையாட்டுப் போட்டிக்கான சகல ஏற்பாடுகளையும், யாழ். மாவட்ட மெய்வல்லுநர் பயிற்சியாளர் திரு. கே. டபிள்யூ விமலராஜா செய்திருந்தார்.

யாழ். மாவட்ட உதைபந்தாட்டப் பயிற்சியாளர் திரு. ஏ. எஸ். குணரட்ணம் அனைவருக்கும் நன்றி கூறினார். (வி)

## மீன், மரக்கறிச் சந்தை

(புலோலி)

புலோலி உப-அலுவலகத்திற்குட்பட்ட தும்பளை கிராம சேவை அலுவலர் பிரிவில் உள்ள கற்கோவளம் பொது சன மீன், மரக்கறிச் சந்தைகளையும் சுமார் 50,000 ரூபா செலவில் அபிவிருத்தி செய்வதற்கான ஆரம்ப நடவடிக்கைகளையும், யாழ்ப்பாணம் அபிவிருத்திச்சபை மேற்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

## வருடாந்த உற்சவம்

(வட்டுக்கோட்டை)

வட்டுக்கோட்டை - சங்கரத்தை ஸ்ரீ முருகமூர்த்தி கோவில் வருடாந்த மகோற்சவம் நாளை புதன்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து பத்துத்தினங்கள் அலங்கார உற்சவம் நடைபெறும். (க)

★ ★ ★

[அராலி]

அராலி வடக்கு அருள்மிகு மயிலியற்புலம் கந்த சுவாமி கோவில் வருடாந்த உற்சவம் எதிர்வரும் 15ம் திகதி ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

தொடர்ச்சியாக 12 தினங்கள் மகோற்சவம் நடைபெற்று 24ம் திகதி தேர் 25ம் திகதி தீர்த்தம். 26ம் திகதி பூங்காவனத் திருவிழாவுடன் நிறைவு பெறும்.

இவ்வாண்டு மகோற்சவத்தின்போது சவூதிக்கு வேலை பெற்றுச் சென்ற இளைஞர்களின் முயற்சியால் வாங்கப்பட்ட ஒலிபெருக்கி அமைப்பும் பயன்படுத்தப் படும் என கோயில் நிர்வாகிகள் தெரிவித்துள்ளனர்.

## சர்வோதய காரியாலயம்

[பூநகரி]

மட்டுவில் தாமுநெசவுசாலை கட்டடத்தில் சர்வோதய காரியாலயத்தை கிளிநொச்சி மாவட்ட சர்வோதய இணைப்பாளர் திரு. சி. க. வேலாயுதபிள்ளை திறந்துவைத்தார். இரா செல்வராஜா, திரு பொ செல்வரத்தினம், ஆசிரியை மங்கையர் திலகம் ஆகியோர் உரையாற்றினார்கள். (க]

## ஓய்வு பெற்றார்

(பண்டத்தரிப்பு)

தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலையில் ஆண்பரிசாரகராக கடமையாற்றிய திரு. க. மரமேஸ்வரன் 36 வருட சேவையிலிருந்து இம்மாதம் தொடக்கம் ஓய்வு பெற்றுள்ளார். இவர் தமது பதவிக்காலத்தில் அங்கொடை, நயினாதீவு ஆகிய வைத்தியசாலையிலும் காங்கேசன்துறை வைத்தியசாலையிலும் பணியாற்றியுள்ளார். [க]

## பரிபாலனசபை உபயகாரர் முடிவு

[சுழிபுரம்]

தொல்புரம வழக்கம்பரை அம்மன்கோவில் புனருத்தாரண வேலைகள் பூர்த்தியாகாததினால் வருடாந்த உற்சவத்தை ஜூலை மாதத்தில் நடாத்துவதென ஆலய பரிபாலன சபையினரும, திருவிழா உபயகாரர்களும் முடிவு செய்துள்ளனர். [வா]

## மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் வட்டுக்கோட்டைத் தொகுதிக்கான மெய்வல்லுநர் போட்டி இன்று காலை காரைநகர் தியாகராசா ம. ம. வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது [சிவ]

## ஆட்சேபம்

[வட்டுக்கோட்டை]

வட்டுக்கோட்டை- சங்கரத்தைக் குளத்தடியில் மின்னழுத்தத்தை மாற்றியமைக்கும் ''டிரான்ஸ் போமர்'' சாதனம் பொருத்துவதற்கான அறை கட்டுவதற்கு அத்திபாரம் அமைக்கப்பட்டுள்ளது

இக் கட்டிடத்தின் அருகில் பல வருடங்களாக நிழல் தந்த ஆலமரத்தை தறிக்கும் முயற்சியினை சங்கரத்தை இந்து வாலிபர் சங்கம் வன்மையாக ஆட்சேபித்துள்ளது, [க]

## பெயர் மாற்றம்

(யாழ்ப்பாணம்)

யாழ் ஏழாலை தெற்கு இந்து தமிழ்க்கலவன் பாடசாலை யாழ் ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாசாலைஎன பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

இதற்கான சகல விபரங்களையும் கல்வி அமைச்சின் செயலாளர் வித்தியாசாலை அதிபர் திரு. சி நா. நடேசனுக்குஅறிவித்துள்ளார். [சிவ-க]

## 'தாயகம்' ஆய்வரங்கு

[பண்டத்தரிப்பு]

தேசியக் கலை இலக்கியப் பேரவையின் ஆதரவில் 'தாயகம்' சஞ்சிகை ஆய்வரங்கு யாழ்ப்பாணம் நல்லூர் இந்து விடுதியில் இம்மாதம் 14ம் திகதி சனிக்கிழமை பிற்பகல் நடைபெறவுள்ளது.

கவிஞர் முருகையன், யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் திரு. எஸ். சிவநாதன், யாழ். சிரேஷ்ட கூட்டுறவு ஆணையாளர் திரு. க சண்முகலிங்கம், திரு. கே. செந்தில்வேல் ஆகியோர் இதில் கலந்துகொண்டு உரையாற்றுவார்கள். (க)

Lipton

லிப்டன் லாவோஜி பிரியர்களுக்கோர்

நற்செய்தி

புதிய குறைந்த விலையில், அதி நிறைந்த சுவையுடன் "லிப்டன்" வாசகம் பொறிக்கப்பட்ட அலுமினியம் சுற்றுத்தாளில் அடைக்கப்பட்டு புதிய பொலிவுடன் "லாவோஜி" தேயிலைப் பக்கட்கள் இப்பொழுது எங்கும் விற்பனை செய்யப்படுகின்றன.

போலி லிப்டன் லாவோஜி பக்கெட்டுகள் விற்பனைக்கு விடப்பட்டுள்ளதனால் லாவோஜி தேயிலை வாங்கும்போது, மேற்கூறப்பட்ட முக்கிய அம்சங்களை அவதானித்து அசல் லாவோஜியை உங்கள் மொத்த, சில்லறை, வியாபாரிகளிடம் பெற்றுக் கொள்ளுங்கள்.




புதிய விலை: ரூபா 3/60 (50 கிரும்)

லிப்டன் சிலோன் லிமிட்டெட்,
த. பெ. எண் 86,
கொழும்பு.

லிப்டன் லவோஜி
அதி சிறந்த தேயிலைத் தூள்

A 493

ஈழநாடு
NATIONAL THAMIL DAILY

செவ்வாய்க்கிழமை 10-6-86

# அருள்நாதன் மறைவின் எதிரொலி
# யாழ். செயலக ஊழியர்கள் ஜனாதிபதிக்கு விசேட மகஜர்!

[சுண்டுக்குளி]

யாழ்ப்பாணம் அரசாங்க செயலக ஊழியர் திரு. அருள்நாதன் கிளிநொச்சியில் 'ஷெல்' தாக்குதலில் கொல்லப்பட்டதையடுத்து வடக்கு கிழக்குப்பகுதிகளில் கடமையாற்றும் அரச ஊழியர்களின் பாதுகாப்புக் குறித்து யாழ். அரசஅதிபர் ஊடாக ஜனாதிபதிக்கு அனுப்பிவைக்கவென மகஜர் ஒன்றை யாழ் செயலக ஊழியர்கள் தயாரித்துள்ளனர்.

இதுசம்பந்தமாக யாழ் செயலகத்தில் நேற்று அரசாங்க எழுதுவினைஞர்சங்கம், அரசாங்க பொதுச்சேவை தொழிலாளர்சங்கம், மற்றும் செயலக ஊழியர்கள் அரச உயரதிகாரிகள் கலந்து கொண்ட விசேட கூட்டமொன்று இடம் பெற்றது.

இதில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

இறந்த அருள்நாதனின் அஸ்தியை யாழ். செயலகத்தில் இருந்து அவரது உருவப் படத்துடன் அவருடைய வீடு வரை ஊர்வலமாக எடுத்துச் செல்வது.

நஷ்ட ஈடாக இவருடைய குடும்பத்துக்கு அரசாங்கத்திடம் இருந்து 1 லட்சத்து ஐம்பதினாயிரம் ரூபா பெற்றுக் கொடுப்பது.

இவருடைய 55 வயது வரை ஓய்வூதியப் பணம் கிடைக்க வழிசெய்வது.

செயலக ஊழியர்களிடமிருந்து 1 நாள் சம்பளத்தை பெற்றுக்கொடுப்பது.

இதேவேளை யாழ் அரசஅதிபரூடாக ஜனாதிபதிக்கு வடக்கு, கிழக்கு மாகாணங்களில் கடமையாற்றும் அரசாங்கஉத்தியோகத்தர்களின் பாதுகாப்புக்கருதி அனுப்பிவைப்பதற்கெனத் தயாரிக்கப்பட்ட மகஜரின் விபரம்வருமாறு:

இம்மாதம் 5-6-86ந் திகதி கொழும்பிலிருந்து மிக முக்கியகடமையை மேற்கொண்டு யாழ்நகர் திரும்பி வருகையில் எமது அரசாங்க அதிபரும், சக ஊழியர்களும் பரந்தன் சந்தியில் ஷெல்தாக்குதல்களுக்கும், விமானத்தாக்குதல்களுக்கும் உள்ளாகி இரு ஊழியர்கள் உயிரோடெரிந்து சாம்பரான திகிலூட்டும் துரதிஷ்டமான சம்பவத்தின் காரணமாக இக் கச்சேரியில் கடமையாற்றும் சக ஊழியர்களும், உத்தியோகத்தர்களும் அரசாங்க அதிபருக்கும் இலங்கை அரசாங்கத்திற்கும் கவலையுடனும், பொறுப்புணர்ச்சியுடனும் விடுவிக்கும் வேண்டுகோள் யாதெனில்:

''விமானத்தாக்குதல் உடன் நிறுத்தப்படவேண்டும். வடக்கு, கிழக்கிலிருந்து இராணுவ முகாம் அகற்றப்படல் வேண்டும். இனப்பிரச்னைக்கு உடனடியாக அரசியற் தீர்வு காணப்படல் வேண்டும். கடமைக்குச் செல்லும் பொழுதும் கடமையிலிருக்கும் பொழுதும், கடமையால் வீடு திரும்பும் பொழுதும் பாதிக்கப்படும் அரச ஊழியர்களுக்கு தக்க நிவாரணம் வழங்கப்படல் வேண்டும். அதாவது படையினருக்கு வழங்குதல் போல் சம்பள ஓய்வூதிய உரிமைகளும், தகுந்த நஷ்டஈடும் வழங்கப்படவேண்டும். வட, கிழக்குப் பகுதிகளில் கடமையாற்றும் சகல ஊழியர்களுக்கும் விபத்து நிவாரணம் வழங்கப்படவேண்டும். கடமையிலிருந்து தன்னைப் பலியாக்கிக் கொண்டதிரு அருள்நாதனுக்கும், திரு சண்முகராசாவுக்கும் உரிய நஷ்டஈடு கொடுக்க அரசாங்க அதிபர் உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும். அவர்களுடைய குடும்பத்தாருக்கு அனுதாபம் தெரிவிப்பதும் நம் அனைவரதும் கடமையாகும்.

## கச்சேரி ஓய்வூதிய திகதி பின்னர் அறிவிக்கப்படும்

[யாழ்ப்பாணம்]

ஜூன் மாத ஓய்வூதியக் கொடுப்பனவு சம்பந்தமான திகதிகள் பின்னர் அறிவிக்கப்படுமென யாழ். செயலக பொதுசனத் தொடர்பதிகாரி தெரிவித்துள்ளார்.

இம்மாத ஓய்வூதியம் வழங்குவதற்கென கொழும்பில் இருந்து கொண்டு வரப்பட்ட கம்பியூட்டர் மூலம் தயாரிக்கப்பட்ட பற்றுச் சீட்டுகளும், கொடுப்பனவு பட்டியல்களும் கடந்த புதன்கிழமை கிளிநொச்சியில் தீக்கிரையானது தெரிந்ததே.

இதனையடுத்தே ஓய்வூதியக் கொடுப்பனவில் தடங்கல் ஏற்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

## நெடுந்தீவு-குறிகாட்டுவான் படகுச்சேவையை தினசரி நடத்த ஏற்பாடு

[ நடுந்தீவு)

நெடுந்தீவு மக்களின் ஏகோபித்த வேண்டுகோளுக்கிணங்க நெடுந்தீவு குறிகாட்டுவான் படகுச் சேவையை தினசரி நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இதற்கான அங்கீகாரத்தை பிராந்திய தொழில் நுட்ப பொறியியலாளர் வழங்கியுள்ளார்.

முன்னர் இச்சேவை வாரத்தில் மூன்று முறையே நடைபெற்றது. அதனால் பிரயாணிகளும், நெடுந்தீவு மக்களும் வெளித்தொடர்புகளையும், செய்திகளையும் பெற முடியாமல் இருந்ததும் தெரிந்ததே. இச்சேவையின் கட்டணமும் சிறிது உயர்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## வீட்டினுள் தங்குவதற்கு அனுமதிகேட்டு கொள்ளை முயற்சி!

[சாவகச்சேரி]

கைதடிநுணாவில் பகுதியில் இருக்கும் குடும்பஸ்தர் ஒருவரின் வீட்டுக்குள் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு 9 மணிக்குப் புகுந்த இளம் திருடன், போலிக் கைத் துப்பாக்கியைக் காட்டி, தன்னை குறிப்பிட்ட ஒரு விடுதலை இயக்கத்தின்போராளி எனவும், 'சென்றி'க்கு நிற்பதால், கண் தூக்கம் ஏற்படுகிறது என்று கூறி அவ்வீட்டில் சற்றுநேரம் ஆறுதலாகத்தங்க அனுமதி கேட்டாராம்.

உண்மைப்போராளி, என நினைத்துக்கொண்ட வீட்டார், இவரை உள்ளே அனுமதித்தார்கள். ஆனால், அந்த வீட்டில் இருந்த குடும்பப் பெண்மணி, வீட்டின் அறைக்குள் நுழைந்தசமயம், துப்பாக்கியைக் காட்டி, சத்தமிட்டால் சுட்டுப்போடுவேன் என அந்த இளைஞன் அவரைப் பயமுறுத்தியுள்ளான்.

தொடர்ந்து திங்கட்கிழமை காலையும், இத்திருடன் அவ் வீட்டில் தனிமையில் இருந்த பெண்மணியின் கழுத்தில் இருந்த சங்கிலியைக் கொள்ளையிட முற்பட்ட சமயம், பெண்மணி சத்தம் எழுப்பியவேளை, அயல்வீட்டுக்காரர்கள் வந்து அவ்விளைஞனைக் கையும் மெய்யுமாகப் பிடித்து கயிற்றினால் கட்டிப்போட்டனர்.

இச்சம்பவத்தினை அறிந்த ஈ பி ஆர் எல். எவ். இயக்கத்தினர் அவ் வீட்டுக்குவந்து, சம்பந்தப்பட்ட திருடனைக் கைது செய்து சென்றுள்ளனர்.

இத் திருடன் மட்டுவில், நுணாவில்பகுதிகளில் பல திருட்டுச் சம்பவங்களில் ஈடுபட்டவன் எனத் தெரிவிக்கப்பட்டது.

## வான் குடைசாய்ந்து இருவர் பலி!

[முல்லைத்தீவு]

பிரயாணிகள் சென்று கொண்டிருந்த வான் ஒன்று குடைசாய்ந்ததில் இருவர் ஸ்தலத்திலேயே பலியானார்கள், பலர் படுகாயமுற்றனர்.

மாங்குளத்திலிருந்து முல்லைத்தீவுநோக்கிச்சென்ற வான் ஒன்றே இந்த விபத்துக்குள்ளானது கறுப்பட்டமுறிப்பு என்னுமிடத்தில் இந்தவிபத்து இடம்பெற்றது.

ஸ்தலத்தில் பலியானவர்களில் ஒருவர் ஒட்டுசுட்டான் மாலா ஸ்ரோர்ஸ் உரிமையாளர் இராமச்சந்திரன் என அடையாளம் காணப்பட்டுள்ளது.

ரயர்வெடித்து குடைசாய்ந்ததிலேயே இவ்விபத்து ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. அந்த வானும் பலத்தசேதமடைந்துள்ளது.

## சர்வோதய உதவி

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சியில் அண்மையில் நடந்த அசம்பாவிதங்களில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவும்வகையில் பெரும்தொகையான உணவு வகைகள், ஐயாயிரம் ரூபா பெறுமதியான மருந்து வகைகள் போன்றவற்றை தொண்டர் குழுவொன்றின் ஊடாக யாழ்ப்பாணத்திலிருந்து 'சர்வோதய' அமைப்பு அனுப்பி வைத்துள்ளது.

இதேவேளை கிளிநொச்சி சம்பவங்களால் காயப்பட்டு யாழ் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுவரும் 23 பேருக்கு காலையும் மாலையும் சத்துள்ள உணவு வகை சர்வோதய நிறுவனம் வழங்கி வருவதாகவும், ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெறுவர்களுக்கு உடைகள் இன்றுவழங்கப்போவதாகவும் வடபகுதி சர்வோதய அமைப்பாளர் திரு. கதிரமலைதெரிவித்தார். [து)

## கொக்குவில் வைத்தியசாலைக்கு உதவி

[யாழ்ப்பாணம்]

அத்தியாவசியமானபெறுமதிமிக்க மருந்துவகைகளையும், உதவிப்பொருட்களையும் மகாராஜா நிறுவனம் கொக்குவில் அரசாங்க வைத்தியசாலை அபிவிருத்திச் சங்கத்திற்கு வழங்கியுள்ளது.

இச்சங்கத்தி தலைவர் திரு. பி. பாலசுப்பிரமணியம் விடுத்த வேண்டுகோளுக்கிணங்கவே இந்த மருந்து வகைகள் மேற்படி வைத்தியசாலைக்கென அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

டாக்டர் சிவபாலசுந்தரம், சாவகச்சேரி முருகன் மில்லைச் சேர்ந்த ரி. தாமோதரம்பிள்ளை ஆகியோரும் இந்தவைத்தியசாலைக்கு உதவிகளை வழங்கியுள்ளனர்.

## மரண அறிவித்தல்

### திருமதி சிவபாக்கியம் தியாகராசா

திருமதி தியாகராசா சிவபாக்கியம் காலமாகிவிட்டார் இவர் காலஞ்சென்ற க.தியாகராசா (முன்னாள் காணி அலுவலர் புகையிரதப் பகுதி) அவர்களின் அன்பு மனைவியும், தி. புலேந்திரன், திருமதி ச. புஸ்பராணி, தி சிவேந்திரன், டாக்டர் தி தியாகேந்திரன், தி. பாலேந்திரன் [பெறியியலாளர்], டாக்டர் தி மகேந்திரன், தி. ஞானேந்திரன் [பொறியியலாளர்] ஆகியோரின் அன்புத்தாயாரும், திரு. இ. சந்தனேஸ்வரன் திருமதி சி. கோதைநாயகி, திருமதி தி. அமிதகுசலாம்பிகை, திருமதி பா. வசந்தி, திருமதி ம. ஜெயந்தி, திருமதி ஞா. ஆதிரை ஆகியோரின் அன்பு மாமியுமாவார் அன்னாரின் ஈமக்கிரியை 601/2, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணத்தில் 10-6-86 செவ்வாய்க்கிழமை நடைபெற்று மாலை 3-00 மணிக்கு கோம்பையன்மணல் மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும் உற்றூர், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

601/2, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
தி. சிவேந்திரன்.
(C2798)

### சார்ள்ஸ் அன்ரன் சபாபதி

இளைப்பாறிய புகையிரதநிலைய அதிபர் சார்ள்ஸ் அன்ரன் சபாபதி அவர்கள் காலமானார். அன்னார் ராஜினியின் அன்புக்கணவரும், தமயந்தி, செல்வக்குமார், ரஞ்சித்குமார், கிஷோக்குமார் ஆகியோரின் அன்புத்தந்தையும், காலஞ்சென்ற C J. சபாபதி திருமதி பிறேக்ஸிடா சபாபதி ஆகியோரின் அன்பு மகனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் 11-6-86 புதன்கிழமை காலை 9-00 மணியளவில் அன்னாரின் இல்லத்திலிருந்து பரிசுத்த கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றூர், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

21/1, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

(C 2800)

### டாக்டர் K. M. தியாகராஜா

கோப்பாய் பிரபலவைத்தியர் டாக்டர் K. M. தியாகராஜா காலமானார். இவர் கண்மணியின் அன்புக் கணவரும், பற்குணமாணிக்கம் (சவுதிஅரேபியா), அருள் மாணிக்கம் (சவுதிஅரேபியா), ருத்திரமாணிக்கம் [ஓமான்), வசந்தமல்லிகா ஆகியோரின் அருமைத் தந்தையும், இளம்பூரணன் (கணக்காளர்), சிவாஜினி, கமலபத்மினி (ரதி), தவரஞ்சினி (டொலி) ஆகியோரின் அருமைமாமனாரும், தக்சாயினி, அருணசொரூபன் ஆகியோரின் பேரனும், உரும்பிராய் இளைப்பாறிய தலைமை ஆசிரியர் K M. தம்பையா, பொன்னம்மா, காலஞ்சென்றவர்களாகிய Koslanda ஓவசியர் கதிரவேற்பிள்ளை, செல்லம்மா, சின்னத்தங்கம் ஆகியோரின் அன்புச்சகோதரருமாவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று செவ்வாய்க்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பி.ப 3 மணிக்கு தகனக்கிரியைக்காக செம்மணி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

''வசந்தசோலை''
13, முருகேசர் ஒழுங்கை,
நல்லூர்.

[C2801]

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1986-ம் ஆண்டு ஜூன் மாதம் 10-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/1003/81 Eelanadu P. O. Box 49, Telegram, Eelanadu, Telephone 22389, 24126,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org